# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTRE

வாராந்த மின்னிதழ்

Ilakku2009@gmail.com  www.facebook.com/ilakkutamilnews  https://twitter.com/Ilakku1

இதழ் 242 | சனி, ஜூலை 08, 2023 | 16 பக்கங்கள்




# புதுடில்லிக்குச் செல்லும் ரணில்
# மோடிக்கு விரையும் கடிதங்கள்

ஆய்வாளர் **அ.நிக்ஸன்**

## நவாலி புனித பீற்றர் தேவாலயப் படுகொலை நினைவு நாள்

**09.07.2023**




## இலங்கையில் மனித புதைகுழிகள்



**கொலையாளிகளை பாதுகாப்பதற்காகவே அரசு சட்டங்களை உருவாக்கியுள்ளது**

அருட்தந்தை **மா. சத்திவேல்**



© 2023 இலக்கு இணையம்

## கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி:

### உண்மை, நீதி, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தக்கோரி போராட்டம்



“இலங்கை அரசே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி உண்மை, நீதி, பொறுப்புக் கூறலை உறுதிப் படுத்துக” எனும் தொனிப் பொருளில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக் கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட பொதுமக்கள் மற்றும், பொது அமைப்புக்கள், சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் என்பன இணைந்து முன்னெடுத்த இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பிரதானமாக சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப் படையில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் அகழ்வுப்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## வடக்கில் சீனித் தொழிற்சாலை இனிப்பு தடவிய விசம் – பொ. ஐங்கரநேசன்

வவுனியாவில் கரும்புத் தோட்டம் மற்றும் சீனி தொழிற்சாலையை அமைக்கும் இத்திட்டத்தினை முன்னெடுக்கும் தரப்பினர், இது போரினால் பாதிக் கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கு வதற்கென வாராது வந்த வரப் பிரசாதம் என்று இனிப்பாய் சிலா கித்து வருகின்றனர்.

ஆனால், இதன் பின்னணி யில் உள்ள உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனி தொழிற்சாலை இனிப்பு தடவிய விஷம் என தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.



ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

வவுனியாவில் அந்நிய முதலீட்டுடன் பாரிய சீனி தொழிற் சாலையொன்றை அமைப்பதற்கும், அதற்குரிய பாரிய கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்கும் அமைச்சரவை அண்மையில்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## அகதி முகாம் மீதான முற்றுகையில் இருந்து இஸ்ரேலிய படைகள் வெளியேறியது

ஏறத்தாள 20 வருடங்களின் பின்னர் மேற்கு கரையில் உள்ள ஜெனின் அகதி முகாம் மீது கடந்த திங்கட்கிழமை (3) இரவு இஸ்ரேலிய படையினர் மேற்கொண்ட முற்றுகை கடந்த புதன்கிழமை (5) அதிகாலை முடிவுக்கு வந்துள்ளது.

கடந்த இரு நாட்களாக அங்கு இடம்பெற்ற தாக்குதல்க ளில் பல சிறுவர்கள் உட்பட 11 பலஸ்தீனியர்கள் கொல்லப் பட்டுள்ளதுடன், பெருமளவானவர் கள் காயமடைந்துள்ளனர்.

பயங்கரவாதிகளின் ஆயுத



உற்பத்தி நிலைகள் மீது தாம் தாக் குதல்களை மேற்கொண்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஆனால் பொதுமக்கள் தங்கியிருந்த அகதிகள் முகாம் மீது இஸ்ரேலிய படையினர் தரை மற்றும் வான் தாக்குதல்களை மேற்கொண்டதாக

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## மென்கடத்திகள் உற்பத்தியில் இந்தியா பின்தங்கியுள்ளது



நாட்டில் தாய்வானின் மென் கடத்தி உற்பத்தி நிறுவனம் தொழிற்சாலை ஒன்றை நிறுவி யதால் இந்தியாவின் மென்உற்பத்தி நிறுவனங்கள் குறைந்த வலு வுள்ள கடத்திகளை உற்பத்தி செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளன.

இலத்திரனியல்துறையில் புதிய யுகத்தை உருவாக்கப் போவதாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் தெரிவித்தபோதும், இந்தியாவின் 3 பில்லியன் டொலர்கள் பெறு மதியான மென்கடத்தி உற்பத்தித் துறை பின்னடைவையே சந்தித்துள் ளது.

அமெரிக்காவின் மைக் ரோன் நிறுவனம் இந்தியாவில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## அணுக்கதிர்வீச்சு நீரை கடலில் கலக்க ஐ.நா அனுமதி

யப்பானில் சேமிக்கப் பட்டுள்ள அணுக் கதிர்வீச் சுக் கொண்ட நீரை பசுபிக் சமுத் திரத்தில் கலப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக அணுசக்தி அமைப்பு கடந்த செவ்வாய்க்கிழமை (4) அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.



2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் யப்பானின் கடல் பகுதி யில் ஏற்பட்ட 9 புள்ளி அளவுள்ள பூமி அதிர்வினால் ஏற்பட்ட ஆழிப்பேரலையினால் பக்குசீமா பகுதியில் அமைந்திருந்த அணுசக்தி யில் இயங்கும் மின்னிலையம் சேதமடைந்திருந்தது. அந்த மின்னி லையத்தில் இருந்து வெளியேறிய கதிரியக்க நீரை யப்பான் அரசு கடந்த 12 ஆண்டுகளாக சேமித்து வைத்திருந்தது.

சீனா, தென்னாபிரிக்கா உட் பட பல மனித உரிமை, சுற்றுச் சூழல் அமைப்புக்கள் தமது எதிர்ப் புக்களை தெரிவித்து வருகின்ற போதும், நீரை கடலில் கலப்பதால் சூழலுக்கும், மனிதர்களுக்கும் பாதிப்புக்கள் ஏற்படாது என ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.

பக்குசீமா அணுசக்தி நிலை யத்தில் இருந்து ஒரு நாளைக்கு 100 சதுரகன மீற்றர் கதிர்வீச்சுக்

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

## ஆபிரிக்க நாடுகளில் கால்பதிக்க இந்தியா முயற்சி

சீனாவுக்கு போட்டியாக வர்த் தகத்தை பலப்படுத்தும் நோக்கத் துடன் ஆபிரிக்க நாடுகளை இந்தியா குறிவைத்து வருகின்றது. அதன் ஒரு அங்கமாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர் நான்கு நாள் பயணமாக கடந்த புதன்கிழமை (5) தன்சானியாவுக்கு பயணம் மேற் கொண்டுள்ளார்.

இந்தியாவின் குடிநீர்த் திட்டம் நடைமுறைப்படுத்தப் படும் சன்சிபார் பகுதிக்கும் அவர் பயணம் மேற்கொள்ளவுள்ளார். தன் சானியாவில் உள்ள வர்த்தகர்களை சந்திப்பதுடன், தன்சானியாவின் வெளிவிவகார அமைச்சரையும் சந்திக்கவுள்ளார். மேலும் நாடாளு மன்ற நட்புறவுக் குழுவுடனும்,



தன்சானியாவில் உள்ள இந்திய மக்களுடனும் அவர் கலந்துரையா டல் ஒன்றையும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளார்.

சன்சிபார் பகுதியில் இந்தியா வின் Indian Institute of Technology நிறுவனம் பல்கலைக்கழகம் ஒன்றை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் திறந்துவைக்கவுள்ளது.

42 ஆபிரிக்க நாடுகளுக்கு

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

## சங்காய் கூட்டமைப்பில் ஈரான் இணைந்தது



இந்தியாவில் கடந்த செவ்வாய்க் கிழமை (4) ஆரம்பமாகிய சங்காய் கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்களின் இணையவழியி லான கூட்டத்தொடரில் ஈரான் உத்தியோகபூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஈரான் இணைத்துக் கொள் ளப்பட்டதை இந்த கூட்டமைப் புக்கு தற்போது தலைமைதாங்கும் இந்தியா அறிவித்தபோது அதனை சீனா, ரஸ்யா உட்பட பல நாடுகள் வரவேற்றுள்ளன.

இந்த கூட்டத்தொடரில் பல நாடுகளின் தலைவர்கள் பேசி யதுடன், தீர்மானமும் நிறை வேற்றப்பட்டுள்ளதாக இந்தியா வின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினாய் மோகன் காற்ரா தெரிவித்துள்ளார்.

நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை பேணுவது, பயங்கரவாத மற்றும் தீவிரவாத குழுவினரின் நடவடிக்கைகளை தடுப்பது. உறுப்பு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தை மேம் படுத்துவது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் டொலரை வர்த்தக நடவடிக்கைகளில் தவிர்ப் பது தொடர்பில் ரஸ்ய அதிபர் தனது உரையில் தெரிவித்துள் ளார். ரஸ்யாவுக்கும் சீனாவுக்கு மிடையிலான வர்த்தகத்தில் 80 விகிதமான நிதி யுவான் மற்றும் ரூபிளில் இடம்பெற்றதாகவும், சங்காய் கூட்டமைப்புக்கும் ரஸ்யா வுக்கும் இடையில் கடந்த வரு டம் 263 பில்லியன் டொலர் கள் பெறுமதியான வர்த்தகம் இடம் பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

அயல் நாடுகளில்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# இராணுவ முகாம்களிலுள்ள பாரிய விகாரைகளின் கீழ் பகுதிகள் மனிதப் புதைகுழிகளாக இருக்கலாம்–ரவிகரன்

முல்லைத்தீவு மாவட்டத்தில், சில இராணுவ முகாம்களில் அமைக்கப்பட்டுள்ள, பாரிய விகாரைகளின் கீழ் பகுதிகள் மனிதப் புதைகுழிகளாக இருக்கலாமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.



குறிப்பாக வட்டுவாகல் மற்றும், கேப்பாப்புலவு உள்ளிட்ட இராணுவமுகாம்களில் பாரிய அளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளவிகாரைகளைச்சுட்டிக்காட்டிய ரவிகரன், இராணுவ முகாம்களில் அவ்வாறு பாரிய அளவில் விகாரைகள் நிர்மாணிக்கப்படவேண்டிய அவசியம் என்ன? எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள்தொடர்பில் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கொக்குத்தொடுவாய் பகுதி நீண்ட காலமாக ஒரு சூனியப் பிரதேசமாக இருந்த ஒரு பகுதியாகும். கடந்த 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இங்கிருந்த தமிழ் மக்கள் அனைவரையும் இராணுவம் வெளியேற்றியது. அப்போதிருந்து நீண்ட காலமாக கொக்குத் தொடுவாய் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்த ஒரு சூனியப் பகுதியாக காணப்பட்டது.

கடந்த 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் யுத்தம் மௌனிக்கப்பட்டபோது சரணடைந்தவர்கள் பேருந்துகளில் ஏற்றப்பட்டு சில இடங்களுக்கு கொண்டுசெல்லப்பட்டதாக நாம் அறிகின்றோம்.

அவ்வாறு சரணடைந்தவர்கள்கூட இராணுவத்தினரால் படுகொலைசெய்யப்பட்டு, பின்னர் இராணுவ சூனியப் பிரதேசமான இங்கே கொண்டுவந்து புதைக்கப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புக்கள்கூட இருக்கின்றன.

தற்போது இங்கே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளும்போது பல மனித எச்சங்கள் தொடர்ந்தும் தென்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேலும் இங்கு அகழ்வுப் பணிகள் முறையாக இடம்பெறுவதாக எமக்குத் தெரியவில்லை. இங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் பாதுகாப்பின்றி பெட்டிகளில் வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எனவே சரியானவிதத்தில் இந்த அகழ்வுப் பணிகளுடைய முடிவுகள் இருக்குமா என்பதிலும் எமக்கு சந்தேகமிருக்கின்றது.

சர்வதேச நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் இந்த அகழ்வுப்பணிகளில் ஈடுபடவேண்டும் என்பதுடன், சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேச நியதிகளைப் பின்பற்றி இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெறவேண்டும் என்பது எமது கோரிக்கையாகவிருக்கின்றது.

இறுதிக்கட்டப் போரின்போது சரணடைந்த தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளுக்கு மன்னிப்பு வழங்காது, சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, இங்கு புதைக்கப்பட்டிருப்பதாகவே மக்கள் சந்தேகிக்கின்றனர்.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

# ஈழத்தமிழர் இறைமையை ஒடுக்கும் பண்பாட்டு இனஅழிப்பை பண்பாட்டு மீட்டுருவாக்க இயக்கத்தாலேயே தடுக்க முடியும்

இன்று ஈழத்தமிழர்கள் மேல் சிங்கள பௌத்த பண்பாட்டு மீட்டுருவாக்கம் என்ற பெயரில் சிறிலங்காவின் தொல்லியல் திணைக்களமும் பௌத்த பிக்குகளும் இணைந்து தொன்மையும் தொடர்ச்சியமான இறைமையுள்ள ஈழத்தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமித்து தொல்லியல் ஆய்வுக்குரிய பகுதிகளாக மாற்றி ஈழத்தமிழர்களின் இறைமையை மூடிமறைக்க முயல்கின்றனர். அதே நேரத்தில் அந்நிலங்களில் பௌத்த விகாரங்களை அமைத்து அவற்றைப் பாதுகாப்பதன் மூலம் அந்நிலங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடந்து சிறிலங்காப் படையினர் ஈழத்தமிழர்களைக் கொத்துக் கொத்தாக இனஅழிப்புச் செய்து அந்நிலங்களில் புதைத்த மனிதப்புதைகுழிகளை உலகம் கண்டு கொள்ளாமல் செய்து சிறிலங்காவின் ஈழத்தமிழின அழிப்பையும் மூடிமறைக்கவும் உதவுகின்றனர். இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான ஆற்றல் அற்றவர்களாக ஈழத்தமிழர்கள் காணப்படுவதற்குக் காரணம் ஒரு யுத்த அழிவின் பின் அப்பகுதிகளில் உடன் உருவாக்கப்பட வேண்டிய பண்பாட்டு மீட்டுருவாக்க முயற்சிகளை இதுவரை யாருமே முன்னெடுக்காதிருப்பதாக உள்ளது.

1977 இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மூலம் ஈழத்தமிழர்கள் உருவாக்கிய தங்களுக்கான தன்னாட்சி உரிமையுள்ளவர்களாக வாழ்வதற்கான முயற்சிக்கு அனைத்துலகச் சட்டங்களின் கீழான ஒப்புதலை அளிக்குமாறு உலகநாடுகளையும் உலக அமைப்புக்களையும் தங்களின் வெளியகத் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் சனநாயக வழிகளில் வேண்டி நிற்கின்றனர். இதனை பண்பாட்டு இனஅழிப்பின் மூலம் ஈழத்தமிழர்களின் வாழ்வியலையும் வரலாற்றையும் மாற்றியமைப்பதனால் தடுப்பதற்குச் சிறிலங்கா பாராளுமன்றக் கொடுங்கோன்மையுடன் கூடிய படைபல பிரயோகத்தைத் ஈழத்தமிழர்கள் மேல் நிலைநிறுத்தி வருவதில் இருந்து தப்பிப்பிழைத்து வாழ்வதே இன்றைய ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினையாக உள்ளது.

இதன் உச்சக்கட்டமாகவே தொல்லியல் ஆய்வுக்கென ஈழத்தமிழர்களின் வளப்பகுதிகளையும் வனப்பகுதிகளையும் தமதாக்கி அங்கு பௌத்த விகாரங்களை அமைத்து வழிபாட்டாளர்களைப் பேருந்தில் கொண்டு வந்து இறக்கி அவ்விடத்தில் சிங்களக் குடியேற்றத்தை நிறுவி படைபல துணையுடன் அப்பட்டமான முறையில் அனைத்துலகச் சட்டங்களை முறைமைகளைச் சிறிலங்கா மீறி வருகிறது. அதனை சனநாயகவழிகளில் படைபல அச்சுறுத்தல்களுக்கு நடுவிலும் பிக்குகளின் சர்வாதிகாரப் பேச்சுக்களுக்கு மத்தியிலும் எதிர்க்க முயலும் ஈழத்தமிழர்களை அடிப்படைவாத அரசியல் நடத்துகிறார்கள் எனக் கிண்டல் செய்யும் சிங்களப் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் அமைச்சர்களும் தங்கள் செயற்பாட்டைச் சிங்கள பௌத்த பண்பாட்டு மீட்டுருவாக்கம் என்றே நியாயப்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் நீரிணைப்புக்கு நிலத்தை ஆழப்படுத்திய பொழுது வெளிவந்த மனிதப் புதைகுழிகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெண்புலிகளின் சீருடைகளையும் கொண்டதாக வெளிவந்து சிறிலங்காவின் இனஅழிப்புக்கு மேலுமொரு சான்றாகியது. 06.07.23இல் நீதிபதி முன்னிலையில் அகழ்வு காலை முதல் மாலை 3.30 மணிக்கு நிறுத்தப்படுவதற்கு இடையில் அங்கு 13 இடங்கள் மனித உடலங்களின் எச்சங்களுடன் கண்டறியப்பட்டுள்ளன. 1984 முதல் கொக்குத் தொடுவாய் மக்கள் வெளியேற்றப்பட்டு சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வரும் சூனியப் பிரதேசம். கேப்பாப்புலவு வட்டுவாகல், பாரிய இராணுவ முகாங்கள் இருந்த பகுதிகளிலும் பெருமளவு நிலம் பௌத்த விகாரைக்கென ஒதுக்கப்பட்டமையும் மனிதப்புதைகுழிகளை மறைக்கும் சிறிலங்காவின் திட்டமா என்ற கேள்வியை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் எழுப்பியுள்ளார். தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்களும் இதனை வலியுறுத்தியுள்ளதுடன் மண்டை தீவில் புனித தோமையார் ஆலயக்கிணற்றுள் 60 இளைஞர்களைச் சிறிலங்கா இனஅழிப்புச் செய்து போட்டனர் என்ற தகவலையும் இன்றும் கடற்படையினர் மண்டைதீவில் 29 தனியாட்களுக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தைத் தமக்கானதாக ஆக்கிரமிப்புச் செய்ய முயல்வதாகவும் எடுத்துரைத்துள்ளார். இதற்கிடை பாராளுமன்றத்தில் பேசும் விடயத்திற்காக கைதாக்கி விசாரிக்க இயலாது என்ற சிறப் புரிமையை பயன்படுத்தி நாடாளுமன்ற உறுப்பினர் சரத்வீரசேகர குருந்தூர் மலையில் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற உத்தரவினை மீறி விகாரை கட்டி வழிபடும் பிக்குகளின் செயலைப் பார்வையிட நீதிபதி சென்ற பொழுது சரத்வீரசேகரா அங்கு சென்று நீதிவிசாரணையில் குறுக்கீடு செய்தமையைக் கண்டித்தமையைப் பாராளுமன்றத்தில் தமிழ் நீதிபதிகளுக்கான எச்சரிப்புக்கான நிகழ்வாக மாற்றி "இந்த நாடு சிங்கள பௌத்தநாடு என்பதைத் தமிழ் நீதிபதிகள் கவனத்தில் கொள்ள வேண்டுமென எச்சரித்துள்ளார். இதன்வழி இலங்கை சிங்கள நாடு பௌத்த நாடு என்ற சிங்கள பௌத்த பண்பாட்டு மீட்டுருவாக்கம் செய்தலையே சிறிலங்கா தனது ஈழத்தமிழின அழிப்புக்கான நியாயப்படுத்தலாக என்றுமே முன்னெடுப்பார்கள் என்பது மீண்டும் உறுதியாகியுள்ளது. இந்நிலையில் ஈழத்தமிழர்கள் தங்கள் பண்பாட்டு மீட்டுருவாக்கத்தை முன்னெடுக்கக் கூடிய பண்பாட்டுப் பேரியக்கம் ஒன்றை உடன் உருவாக்கினாலே அவர்கள் மேல் சிறிலங்கா தொடர்சியாகத் தொடுத்து வரும் பண்பாட்டு இனஅழிப்புப் போருக்கு முகங்கொடுக்க முடியும்.

இதற்கிடை வடக்கில் மாணவர்களை சிறிலங்கா படைகளால் தேசிய மாணவர் படையணிக்குப் பயிற்றுவிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தற்போது 40000 மாணவர்கள் தேசிய மாணவர் படையணியில் உள்ளனர் எனவும் இதில் 10000 பேரே வடக்கு கிழக்கில் உள்ளனர் எனவும் இதனால் இப்பகுதிகளில் தேசிய மாணவர் படையணியை அதிகரிக்கப்போவதாகவும் சிறிலங்காவின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன் ஜனாதிபதி ஊடகமையத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். இது தேசிய மாணவர் படையணிப் பயிற்சி என்ற பெயரில் ஈழத்தமிழர் பண்பாட்டில் வளர வேண்டிய ஈழத்தமிழ் இளையவரைச் சிறிலங்கா சிங்களப்பண்பாட்டுள் கொண்டு செல்வதற்கான முயற்சியின் தொடக்கமாக உள்ளது. இது ஈழத் தமிழர் தங்களுக்கான பண்பாட்டு பேரியக்கம் ஒன்றைத் தாயகத்தில் உலகத்தமிழர்களுடன் தொடர்புள்ளதாக உடன் தொடங்கி ஈழத்தமிழ் இளையவரை உரிய முறையில் வழிநடத்த வேண்டியதன் தேவையை தெளிவாக்குகிறது என்பதே இலக்கின் கருத்தாக உள்ளது. சமகால இளையவர் பிரச்சிளையான போதைக்கு அடிமையாதலில் இருந்து அவர்களை விடுவிக்கவும் பண்பாட்டுப் பேரியக்கம் பெரிதும் உதவும் என்பதும் இலக்கின் உறுதியான எண்ணம். உண்மையை உறுதிப்படுத்தவும் நீதியை நிலைநாட்டவும் எதனையும் தாங்கி அமைதியுடன் வாழவும் உள்ளத்துக்குச் சக்தியளிப்பது பண்பாடேயாதலால் பண்பாட்டுப்பேரியக்கம் ஒன்று ஈழத்தமிழரின் சமூக பொருளாதார அரசியல் ஆன்மிக விடுதலைக்கான அடிப்படைத் தேவையாக உள்ளது என்பது இலக்கின் உறுதியான எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# பொருளாதார மீட்சிக்கு உதவுமா ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம்?

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பிரேரணை நாடாளுமன்றத்தில் கடந்த சனிக்கிழமை நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதேவேளையில், ஊழல் எதிர்ப்புச் சட்டமூலமும் வியாழக்கிழமை நாடாளுமன்றத்தில்அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை வாக்கெடுப்பின்றி நிறைவேற்ற பிரதான எதிர்க்கட்சி இணக்கம் தெரிவித்ததையடுத்து, அந்த சட்டமூலம் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட் டது.

கடன் மறுசீரமைப்புப் பிரேரணையும், ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் ஒருவகையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. இலங்கை தனது கடன்களைக் கொடுக்க முடியாமல் வங்குரோந்து நிலைமைக்குச் சென்றமைக்கு நாட்டில் காணப்பட்ட ஊழல்கள் பெரும் பங்கை வகித்திருக்கின்றன. அந்தப் பின்னணியில்தான் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் அவசியம் என்பது வலியுறுத்தப்பட்டு, இப்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

இந்த இரண்டு சட்டமூலங்களுக்கும் நாடாளுமன்றத்தின் ஆதரவைப் பெற்றிருப்பதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றொரு தடையையும் தாண்டியிருக்கின்றார். அதேவேளையில், என்னதான் விமர்சனங்கள், எதிர்ப்புக்கள் இருந்தாலும், பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற ஆதரவுடன் தனது ஆட்சியைத் தொடர முடியும் என்பதையும் அவர் நிரூபித்திருக்கின்றார். அதாவது, தற்போதைய நிலையில் ஸ்திரமான ஆட்சி ஒன்றை அவர் அமைத்திருக்கின்றார்.

எதிர்க்கட்சிகளின் கடுமையான விமர்சனங்கள், எதிர்ப்புக்களின் மத்தியில்தான் கடன் மறுசீரமைப்பு பிரேரணை நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டது. பொது மக்களின் வங்கி வைப்புக்களில் கைவைக்கப்படும், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவும் ஆபத்துக்குள்ளாகும் என்ற வகையில் எதிர்க்கட்சிகள் பிரச்சாரங்களை முன்னெடுத்துவந்திருந்தன. ஆனால், அவ்வாறு எதுவும் இடம்பெறாது என்பது அரசாங்கத்தின் வாக்குறுதியாக இருந்து வந்திருக்கின்றது.

அதனைத்தாம் காப்பாற்றிவிட்டதாக அரசாங்கம் சொல்லிக்கொள்கின்றது. ஆனால், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றில் சில பாதிப்புக்களை எதிர்காலத்தில் எதிர்கொள்ள வேண்டிவரலாம் என பொருளாதார ஆய்வாளர்கள் சிலர் குறிப்பிடுவதை புறக்கணித்துச் சென்றுவிட முடியாது. அதாவது, அவற்றின் அங்கத்துவர்களுக்கு கிடைக்க வேண்டிய வட்டி விகிதம் குறையப் போகின்றது. இது சில வருடங்களுக்குத் தொடரும்.

உள்நாட்டில் அரசாங்கம் பெற்றிருந்த கடன்களில் அதிகமான தொகை ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் தான் பெறப்பட்டிருந்தது. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை செய்யும் போது அவற்றிற்குப் பாதிப்பு ஏற்படுமா என்ற அச்சம் உருவாகியிருந்தமைக்கு அதுதான் காரணம்.

உள்நாட்டில் அரசாங்கம் பல தரப்பினரிடமிருந்தும் கடன்களைப் பெற்றிருக்கின்றது. முக்கியமாக மத்திய வங்கி, அரச மற்றும் தனியார் வங்கிகள், ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், மற்றும் நிதி நிறுவனங்களிடமிருந்து திறைசேரி மூலமாக கடன்களைப் பெற்றிருக்கின்றது. இன்றைய நிலையில் இலங்கையின் மொத்த கடன் 83 பில்லியன் டொலர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதில் சுமார் 42 பில்லியன் டொலர் உள்நாட்டுக் கடன்களாகும். இதில் சுமார் 19.5 பில்லியன் டொலருக்கே இப்போது மறுசீரமைப்புச் செய்யப்படவிருக்கின்றது.

இந்த கடன் மறுசீரமைப்பைச் செய்யும்



போது மூன்று வெவ்வேறான நடைமுறைகளைப் பின்பற்ற முடியும். முதலாவது, பெற்றுக்கொண்ட தொகைக்கான வட்டி வீதத்தைக் குறைத்தல். இரண்டாவது, திருப்பிச் செலுத்துவதற்கான கால எல்லையை நீடித்தல். மூன்றாவது, பெற்றுக்கொண்ட கடனில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்யுமாறு கோருதல்.

இவ்வாறு மூன்று விதமான நடைமுறைகள் பின்வற்றக்கூடியவையாக இருப்பதால், பொது மக்களைப் பாதிக்காத வகையில் இதனை நடைமுறைப்படுத்த முடியும் என்ற வாதம் ஒன்றும் முன்வைக்கப்பட்டது. அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருக்கும் மறுசீரமைப்புத் திட்டத்தின்படி வங்கிகளிலுள்ள பொதுமக்களின் வைப்புக்களுக்கு பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அரச மற்றும் தனியார் வங்கிகளிடமிருந்து பெறப்பட்ட கடன்களுக்கு மறுசீரமைப்புச் செய்யப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் வரி வருமானத்தில் 50 வீதமான பங்களிப்பை வங்கிகள்தான் செலுத்துகின்றன. அதாவது மக்களிடமிருந்து அரசாங்கத்துக்கு வரியைப் பெற்றுக்கொடுப்பதில் வங்கிகளுக்கு பிரதான பங்குள்ளது. இது போன்ற காரணிகளால், இலங்கையின் பொருளாதாரத்தில் வங்கிகளின் பங்கு பிரதானமாக இருந்துள்ளது. இதனால், வங்கிகளை மேலும் நெருக்கடிக்குள்ளாகக்கக்கூடாது என்பதில் அரசாங்கம் உறுதியாக இருந்துள்ளது.

இதனைவிட சுமார் 5 கோடி 70 இலட்சம் வங்கிக் கணக்குகள் நாட்டில் காணப்படுகின்றது. மக்கள் நம்பிக்கையின் அடிப்படையில்தான் அந்த வங்கிக் கணக்குகளை வைத்திருக்கின்றார்கள். வதந்திகளின் அடிப்படையில் வங்கிக் கட்டமைப்புக்களில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் ஐந்து நாட்களுக்கு வங்கிகள் மூடப்பட்டன.

ஆனால், மத்திய வங்கி அரசாங்கத்துக்குக் கொடுத்த கடன்களுக்கு மறுசீரமைப்பு செய்யப்படவிருக்கின்றது. இது பொதுமக்களுக்கு சுமை எதனையும் ஏற்படுத்தாது.

அரசாங்கத்தினால் பெறக்கூடிய வருமானத்தில் பெருந்தொகை கடன்களைச் செலுத்துவதற்கும், அதற்கான வட்டியைக் கொடுப்பதற்குமே போதுமானதாக இருந்துள்ளது. நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்க முடியாத நிலை இதனால்தான் ஏற்பட்டது. இதன் உச்சகட்டமாகத்தான் வங்குரோத்து நிலைக்கு நாடு வந்துவிட்டது என்ற அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இது தொடர்பபாக இலங்கை வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரசல் பொன்சேக்கா தெரிவித்த கருத்துக்கள் தற்போதைய நிலை

அகிலன்

ஏன் ஏற்பட்டது, அரசாங்கம் இதனை எவ்வாறு கையாண்டது என்பதை விளக்குகின்றது. அவர் சொன்னது இதுதான்;

“உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களாக மொத்தமாக 84 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இதற்கான போதுமான பொருளாதாரம் இலங்கைக்கு கிடையாது. அந்த கடனுக்கான வட்டி ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அந்த நேரத்தில்தான் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

இந்த 84 பில்லியன் டொலர் கடனை மீளச் செலுத்த நாங்கள் சில ஏற்பாடுகளை செய்ய வேண்டியிருந்தது. வெளிநாட்டுக் கடன்களை மறுசீரமைப்பதில், வெளிநாட்டுக் கடன்களை வழங்கிய நாடுகளுடன் உடன்பாடு எட்டப்பட வேண்டும். உடன்பாடு ஏற்பட்டவுடன், கடனை தள்ளுபடி செய்யலாம்.

இலங்கையிலுள்ள வங்கி வைப்பாளர்களைப் பாதிக்காத வகையில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம், நிதி அமைச்சு மற்றும் சர்வதேச நாணய நிதியம் ஆகியன ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் வைப்பாளர்களுக்கு இழப்பு அல்லது பாதிப்பு ஏற்படாது என்று நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்.

மேலும் ஓய்வூதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவதற்கு பெருமளவான பிணைமுறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மாற்று தீர்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று வட்டி விகிதத்தைக் குறைப்பது. மற்றொன்று கடனை மீளச் செலுத்துவதை ஒத்திவைப்பது. இதன் காரணமாக, ஊழியர்களின் சேமலாக நிதியம் மற்றும் ஏனைய நிதியங்களில் உள்ள பணம் பாதுகாக்கப்படுகிறது.

பணவீக்கத்தால் ஊழியர் நிதியங்களுக்கு அரசு வழங்கும் வட்டி வருமானம் அதிகமாக உள்ளது. இருப்பினும், வட்டி வருமானத்தின் இந்த பிரச்சினை பங்களிப்பு நிதிகளை மட்டுமே பாதிக்கிறது. எனவே, ஊழியருக்கு எந்த நஷ்டமும் ஏற்படாது. அனைத்துப் பணத்தையும் இழப்பதற்குப் பதிலாக, உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் மூலம் இந்த மட்டத்திலாவது பணத்துடன் குறிப்பிடத்தக்க வட்டியைப் பெறுவது மகிழ்ச்சியான விடயமாகும்.

இத்திட்டத்தின் மூலம் நாடு பல பொருளாதார நன்மைகளைப் பெறும். நாட்டுக்குத் தேவையான பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் எளிதாகப் பெறலாம். மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கிறது. அந்த நிலையை அடைய நாம் சில தியாகங்களைச் செய்ய வேண்டும். இல்லையேல் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குவதைத் தடுக்க முடியாது” என்று அவர் கூறியிருக்கின்றார்.

அரசாங்கத்தின் இலக்குகளை அடைவதற்கு கடன்களைக் குறைக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் சர்வதேச ரீதியாகவும், உள்நாட்டிலும் கையாண்ட பொறிமுறைகள் பெருமளவுக்கு வெற்றிபெற்றிருப்பதாக அரச தரப்பில் சொல்லப்படுகின்றது. ஊழல்களும், வீண்விரையங்களும் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்துவதன் மூலமாக மட்டுமே இது போன்ற ஆபத்து மீண்டும் வராதிருப்பதை உறுதிப்படுத்த

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்



# புதுடில்லிக்குச் செல்லும் ரணில்
# மோடிக்கு விரையும் கடிதங்கள்

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவிற்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையில் தமிழ் தேசிய கட்சிகள் இந்திய பிரதமருக்கான கடிதங்களை தயாரித்துக்கொண்டிருக்கின்றனர். இந்திய - இலங்கை அரசியலில் இந்த நிகழ்வுகள் ஒரு பரபரப்பை இப்போது ஏற்படுத்தியிருக்கின்றது. இந்தப் பின்னணியில் என்ன நடைபெறுகின்றது? என்ன நடைபெறும்? என்பதையொட்டி அரசியல் ஆய்வாளரும் பத்திரிகையாளருமான அ. நிக்சன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களை இலக்கு வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்.**



ஆய்வாளர் **அ.நிக்ஸன்**

**ஜனாதிபதியாக பதவி ஏற்ற சுமார் ஒரு வருடம் சென்றுள்ள நிலையில் ரணில் இந்தியாவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை இந்த மாத இறுதியில் மேற்கொள்ளவிருக்கின்றார். இரு தரப்பு உறவுகளைப் பொறுத்தவரையில் இந்த விஜயம் எந்தளவிற்கு முக்கியத்துவம் பெறுகின்றது?**

இந்தியாவிற்கு ஜனாதிபதி ரணில் பயணம் செய்ய ஏற்பாடு செய்யப்படுகின்றது. அநேகமாக இந்தியா வழங்கிய உதவி,குறிப்பாக இந்த பொருளாதார நெருக்கடியின்போது இந்தியா இலங்கைக்கு நான்கு பில்லியன் (4,000,000.00) வரை உதவி வழங்கியிருக்கின்றது. அதன்பின்னரும் வேறுபல உதவிகளை செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை வெளியுறவு அமைச்சு மேற்கொண்டிருந்தது. இதன் பின்னணியில் ரணிலின் இந்தப் பயணம் அமைகின்றது. அநேகமாக முதலீடுகளை அதிகரிப்பது. குறிப்பாக சர்தேச நாயண நிதியத்தின் மூலமான உதவி களுக்கு இந்தியாவினுடைய ஒத்துழைப்பு அவசியமாகின்றது. அடுத்த கட்ட உதவியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் பல நிபந்தனைகளை விதித்து வருகின்றது. ஏற்கனவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறுகின்றது. சில நிபந்தனைகள் மாத்திரம் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. ஆகவே இதன்பின்னணி இந்தியாவினுடைய உதவி இலங்கைக்கு அவசியம் தேவைப்படுகின்றது என்ற அடிப்படையில் இந்த பயணத்தைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

**இந்த விஜயத்தின்போது ரணில் விக்கிரமசிங்காவிடமிருந்து இந்தியா பிரதானமாக எதனை எதிர்பார்க்கின்றது?**

குறிப்பாக இந்த ஈழத் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களில் இந்தியா அழுத்தங்களைக் கொடுப்பதாக நாங்கள் சொன்னாலும் 13 ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதைத் தவிர இந்தியா அதற்கு அங்கால் சென்று எந்த அழுத்தங்களையும் இலங்கைக்குக் கொடுக்கப்போவதில்லை. முக்கியமாக இந்து பசுபிக் பிராந்திய பாதுகாப்பு விவகாரத்தில் இந்தியாவினுடைய எதிர்பார்ப்பு என்னவென்றால் இலங்கை தங்களோடு நிற்கவேண்டும். தங்களுக்காக செயற்படவேண்டும். சீனாவிட மிருந்து பொருளாதார, நிதி உதவிகளைப் பெற்றாலும் கூட, இந்து பசுபிக் பாதுகாப்பு விடயத்தில் குறிப்பாக இராணுவ ரீதியான அணுமுறைகள் இலங்கை இந்தியாவிற்கு ஏற்ற தளமாக இருக்கவேண்டும் என்பதை இந்தியா எதிர்பார்க்கின்றது. விரும்புகின்றது. அந்த அடிப்படையில்தான் இலங்கையோடு இந்தியா உறவுகளை மேற்கொள்ள முற்படுகின்றது. அதன் ஒரு கருவியாகத்தான் ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில் 13 ஐ நடைமுறைப்படுத்தவேண்டும் என்ற விடயம் அங்கே அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

அதே வேளை வடக்கு கிழக்கை மையமாகக் கொண்ட பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியா ஏற்பாடு செய்கின்றது. குறிப்பாக திருகோணமலை, யாழ்ப்பாணம், காகேசன்துறை, பலாலி விமானநிலையம் போன்றவற்றை மையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டம். அத்தோடு யாழ்ப்பாணம் தீவு பகுதிகளை மையமாகக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்களில் இந்தியா அதிக கவனம் செலுத்துகின்றது. யாழ்ப்பாணம் தீவு பகுதிகளில் சீனாவும் அதிக கவனம் செலுத்துகின்றது. ஆகவே அந்த விடயங்கள் தொடர்பாகவும் இலங்கையோடு பேசுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏற்கனவே இரண்டு நாடுகளினுடைய வெளியுறவு அமைச்சும் இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றது. ஆகவே இதனுடைய அடுத்த கட்டமாக நான் நினைக்கின்றேன். ஒப்பந்தங்கள் அல்லது ஆரம்ப கட்ட இணக்கப்பாடுகளுக்கான முயற்சிகளுக்காகத்தான் இந்த பயணத்தை பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

**நீங்கள் குறிப்பிட்டதுபோல் இலங்கையில் சீனாவின் செல்வாக்கு அண்மைக்காலத்தில் அதிகரித்து வருகின்றது. எனவே சீனாவில் இருந்து அதிகரித்து வரும் செல்வாக்கை குறைப்பதற்கான முயற்சிகள் எதனையாவது இந்தியா இந்த விஜயத்தின் போது முன்னெடுக்குமா?**

நிச்சயமாக அதற்கான அழுத்தம் தான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக இந்த கொழும்பு போட்சிற்றி திட்டம் அதனோடு இணைந்த கொழும்பு துறைமுகத்தினுடைய சில அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அம்பாந்தோட்டை ,ஹம்பாந்தோட்டையை மையப்படுத்திய சில அபிவிருத்தித் திட்டங்களுக்கும் இலங்கை (குடியுரிமை) அனுமதி கொடுத்திருக்கின்றது சீனாவுக்கு எனவே இதன் பின்னணியில்தான் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. இதுவரை காலமும் அழுத்தம் கொடுக்கப்பட்டாலும் கூட இந்த போட்சிற்றியை மையமாகக் கொண்ட சீனாவினுடைய செயற்பாடுகள் குறிப்பாக கொழும்புத்துறைமுகத்தை மையமாகக் கொண்ட சீனாவினுடைய செயற்பாடுகள். ஏற்கனவே கொழும்பு கிழக்கினுடைய அபிவிருத்தி வேலைகளை இந்தியா யப்பான் இலங்கை என்ற அந்த மூன்று நாடுகளும் இணைந்து குறிப்பாக ஜப்பான் இந்தியாவும் அந்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க இருந்தன. ஆனால் அது பற்றிய ஒப்பந்தம் செய்யப்பட்டாலும் கூட அது நடைமுறைக்கு வரவில்லை. அதன் பின்னணியில் மேற்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னணியில் தான் சீனாவினுடைய அந்த கொழும்பு துறைமுகத்தை நோக்கிய அபிவிருத்தித் திட்டம் அதற்கான இணக்கப்பாடுகளை இலங்கை வழங்கியிருக்கின்றது. ஆகவே இதன் பின்னணியில் தான் இந்தியா கடும் அழுத்தங்களைக் கொடுக்கின்றது இலங்கைக்கு.

ஆகவே நெருங்கி செல்லுகின்ற இந்த பயணத்தின் மூலம் அதிகமாக அழுத்தங்களை குறிப்பாக சீனாவினுடைய செல்வாக்கைக் குறைக்கின்ற அல்லது இந்தியாவினுடைய தேவைக்கு இலங்கையை எப்பிடி பயன்படுத்தலாம் என்பது குறிப்பாக இந்தியா இலங்கையில் எதிர்பார்க்கின்ற முக்கியமான தளங்களை இந்தியாவிற்கு கொடுப்பது போன்ற விடயங்கள் அதே நேரம் அம்பாந்தோட்டையிலே பெற்றோலிய நிறுவனம் வழங்கப்பட்டிருந்தது. அம்பாந்தோட்டை சீனாவோடு செல்லக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அதன் பின்னணியில் தான் இந்த பயணத்தை பார்க்கக்கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் இதுவரை காலமும் பெற்றோல் மற்றும் டீசல் உடைய விற்பனை என்பது இலங்கையிலே இந்திய நிறுவனங்கள் தான் செய்து வந்தன. இப்போது சீன நிறுவனங்களுக்கும் கையளிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே இதன் பின்னணியில் வழங்கப்போகின்ற அழுத்தம் என்பது எதிர்காலத்தில் இலங்கையில் இந்திய சீனாவுக்கான இடங்களை கொடுப்பதை தவிர்க்கவேண்டும் என்பதும் இந்தியாவினுடைய நகர்வுக்கேற்ப இலங்கை செயற்படவேண்டும் என்ற எதிர்பார்ப்போடும் தான் இந்த பயணம் அமைகின்றது. அநேகமாக இந்த பயணத்தின் பின்தான் இந்திய இலங்கை இடையேயான வர்த்தகரீதியான அல்லது முதலீட்டு ரீதியான ஒப்பந்தங்கள் அல்லது ஆரம்ப கட்ட இணக்கப்பாடு என்பன வாய்ப்புக்கள் அதிகமாக தென்படுகின்றது.

**இந்தியாவை கையாள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க தரப்பு கையாளக்கூடிய உபாயங்கள் என்னவாக இருக்கமுடியும்?**

அநேகமாக ஈழத் தமிழ் மக்கள் சார்ந்த விடயங்களை இந்த 13 ஐ முழுமையாக நடைமுறை படுத்தவேண்டும் என்ற அந்த விடயத்தில் இந்தியா வழமையை விட இம்முறை கடும் அழுத்தம் கொடுக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இதன் காரணமாகத் தான் நீங்கள் பாருங்கள் வடக்கு கிழக்கிலும் இந்த 13 ஐ ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

# இலங்கையில் மனித புதைகுழிகள்



## கொலையாளிகளை பாதுகாப்பதற்காகவே அரசு சட்டங்களை உருவாக்கியுள்ளது

அருட்தந்தை மா. சத்திவேல்

இலங்கையின் ஆட்சியாளர்கள் பேரினவாதத்தை மூலதானமாக்கி முதலாளித்துவத்திற்கு அடிபணிந்தே ஆட்சி செய்கின்றனர். இதற்கு எதிரான சக்திகளையும், துணை மற்றும் ஆதரவு சக்திகளையும் மட்டுமல்ல இவர்களை அச்சுறுத்துவதற்கு பொது மக்களையும் பழி வாங்கும் முகமாக கொலைகளை செய்வதற்கு படைகளை உருவாக்கி கொலையாளிகளை பாதுகாக்க சட்டங்களையும் காலத்திற்கு காலம் உருவாக்குவதோடு அதற்கென அதிகாரங்களை பயன்படுத்துவதற்கும் பின்னிக்க தயங்குவதில்லை என்பதை "சிறிலங்காவில் பாரிய மனித புதை குழிகளும் வெற்றி அடையாத அகழ்வ பணிகளும்" எனும் ஆய்வு அறிக்கை வெளிப்படுத்துகின்றது.



கடந்த மாத( 2022 ஜூன்) இறுதியில் சிறிலங்காவில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு( JDS,மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்(CHRD), காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் அமைப்பு(-FOD) மற்றும் உண்மை மற்றும் நீதி தொடர்பான சர்வதேச திட்டம்(ITJP) என்பன இணைந்து இலங்கையில் பாரிய மனித புதைக்குழிகளின் வெற்றியடையாத அகழ்வுப் பணிகள் தொடர்பாக தமது அவதானிப்புகளை அறிக்கையாக வெளியிட்டுள்ளன.



இவ் ஆய்வு அறிக்கையில் 1971 மற்றும் 1988/89 ஆம் ஆண்டுகள் தெற்கில் எழுந்த இளைஞர் கிளர்ச்சியை அடக்குவதாக கூறி அரச படையினர் நடத்திய கொலை வெறி ஆட்டத்தோடு தொடர்புடைய 9 பாரிய மனித புதை குழிகள் தொடர்பாகவும்; வடகிழக்கில் தொடர்ந்த யுத்தத்தோடு தொடர்புடைய 10 சமூக மனிதப் புதைகுழிகள், கொழும்பு பொல்கொடவாவியில் 1995ஆம் ஆண்டு மிதந்த தமிழீழ விடுதலைப் புலிகள் இளைஞர்களின் சடலங்கள் என நம்பப்படுகின்ற சடலங்கள் தொடர்பான அறிக்கை அதில் அடங்கியுள்ளது.

இவ்வுலகில் பிறக்கின்ற ஒவ்வொருவருக்கும் கௌரவமாக உயிர் வாழும் உரிமை உள்ளது. அதற்கான சமூக, பொருளாதார, அரசியல் சூழலை உறுதி செய்வது அரசின் பொறுப்பாக இருப்பது போல ஒவ்வொரு பிரஜைக்கும் அவர்களின் மரணமும் மரண சடங்கும் கௌரவமாக அமைதல் வேண்டும்.

இதற்கென்று தமக்கான ஆட்சியாளர்களை ஜனநாயக வழியில் மக்கள் காலத்திற்கு காலம் தேர்ந்தெடுக்கின்றார்கள். இவர்கள் அமைதியான சூழலில் மக்கள் வாழ்வதற்கான சட்டங்களை இயற்றி அதனை தாம் பின்பற்றுவதோடு அமைதியான சுதந்திரமான வாழ்வினை நாட்டில் உறுதி செய்திடலும் வேண்டும்.



ஆனால் அத்தகைய வாழ்வு சூழல் கடந்த பல தசப்தங்களாக நாட்டில் இருக்கவில்லை என்பதையே சமூக புதைக்குழிகள் வெளிப்படுத்துகின்றன. அது மட்டுமல்ல ஜனநாயகம்,மனித உரிமை, சுதந்திரம். என்பன குழி தோண்டி புதைக்கப்பட்டதன் அடையாளமாகவும் சமூகப் புதைகுழிகள் விளங்குகின்றன.

சட்டத்திற்கு புறம்பாக கொல்லப்பட்டு புதைக்கப்பட்ட இடங்கள் கண்டறியப்படுமாயின் அது அகழவும், ஆய்வு செய்யவும், விசாரணை செய்யவும் அரசுக்கு பல கடப்பாடுகள் உள்ளன. அக் கடப்பாடுகளை நிறைவேற்றுகின்ற போது மக்களுக்கு ஆட்சியாளர் தொடர்பாக நம்பிக்கை ஏற்படும்.

சட்டத்திற்கு முறனாக கொல்லப்பட்டு மறைவாக புதைக்கப்பட்ட இடங்கள் சிதையாது பாதுகாக்கப்படல், அவ்வாறான புதைகுழிகள் இருப்பதாக சந்தேகப்படும் இடங்களை அகழ்வதற்கு வழி செய்தல், அகழ்வதற்கும் ஆய்வதற்கும் விசாரணை செய்வதற்கும் போதுமான சட்டங்களை சர்வதேச நியதிகளுக்கு ஏற்ப வரைதல், பாதிக்கப்பட்டவர்கள் சந்தேகப்படாத அளவில் விசாரணைகளை முன்னெடுத்தல், குற்றவாளிகள் என அடையாளப்படுத்தப்பட்டவர்கள் தண்டனையிலிருந்து தப்புவதை தடுத்தல், அரசு அதிகாரிகள் மற்றும் திணைக்கரங்களின் பூரண ஒத்துழைப்பை பெற்றுக் கொடுத்தல், ஆய்வு விசாரணை போன்றவற்றிற்கு போதுமான வளங்களை ஒதுக்குதல், அதற்கான நிபுணத்துவம் கொண்டவர்களை உருவாக்குதல், சர்வதேச ஆலோசனைகளையும் ஒத்துழைப்புகளையும் பெற்றுக் கொள்ளல், தேவை ஏற்படின் சர்வதேச தரம் வாய்ந்த அங்கீகரிக்கப்பட்ட தடையவியல் ஆய்வியல் நிபுணர்களை வரவழைத்தல், அரசின் தலையீடுகள் இன்றி அகழ்வு, ஆய்வு, விசாரணைகளை மேற்கொள்ள வழி வகுத்தல்,சாட்சிகளை பாதுகாத்தல், அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்களை மரபணு பரிசோதனைக்கு ஏற்ப உறவுகளிடம் கையளித்து அவரவர் சமய மற்றும் கலாச்சார முறைப்படி நல்லடக்கம் செய்ய வழி ஏற்படுதல் என்பன அவற்றுள் சிலவாகும்.

ஆனால் இலங்கையில் இவையெல்லாம் முறையாக கடைப்பிடிக்கப்படவில்லை என்பதையே அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

சமூக புதைகுழிகளாக அடையாளப் படுத்தப்பட்ட இடங்கள், ஆய்வுகள், விசாரணை,குற்றவாளிகளின் தண்டனை அனைத் திலும் அரசியல் தலையீடு முழுமையாக இருந்துள்ளதை அறிக்கை வெளிப்படுத்துகின்றது.இது நீதியை கொலை களத்திற்கு இழுத்துச் செல்லும் செயலாகும்.

உதாரணமாக விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களின் மகன் ஒருவர் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணை குழுவிற்கு கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சமூக புதைகுழி 2014ல் களுவாஞ்சிக்குடியில் அவர அவசரமாக தோண்டப்பட்ட போது அந்த கொலைகளுக்கு காரணமாக இருந்தவர் மகிந்த ராஜபக்சாவின் ஆட்சிக்கும் தொடர்புடையவர் என அடையாளம் காணப்பட்டதால் ஆய்வு பணிகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.



அதேபோன்று 2012 ஆம் ஆண்டு மாத்தளையில் சமூக புதைகுழி அடையாளம் காணப்பட்டு 155 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. 1988/ 89 ஆம் ஆண்டுகளில் பிரதேச ராணுவ பொறுப்பாக இருந்தவர் கோத்தய ராஜபக்ச. அவரே சடலம் தோண்டி எடுக்கப்பட்ட காலப்பகுதியில் பாதுகாப்பு செயலாளராக இருந்தார். வழக்கு நடந்து கொண்டிருந்த போது ஜனாதிபதி ஆணைக் குழுவும் நியமிக்கப்பட்டது தொல்லியல் ஆய்வாளர் அறிக்கையின் படி அது 1980 ஆம் ஆண்டு காலத்தில் பாதிக்கப்பட்டதாக என்று கூறப்பட்ட போதும் அங்கு அது

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

# ஆயுதப்போராட்ட காலத்தில் இழக்காத பல விடயங்கள் இழக்கப்பட்டு வருகின்றன

மட்டு.நகரான்

தமிழ் தேசிய அரசியல்வரலாற்றில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன்னெடுப்பினை இந்நாளில் ஆரம்பிப்பதற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ் தேசியத்தின் பயணமானது வெறுமனே அரசியல் ரீதியாக மட்டுமே முன்கொண்டுசெல்லப்படுகின்றது. இதன்காரணமாக ஆயுதப்போராட்ட காலத்தில் இழக்காத பல விடயங்கள் இழக்கப் பட்டுவருகின்றன.

தீர்ந்துசெல்லும் தமிழ் தேசியத்தினை பலப்படுத்தவேண்டிய பொறுப்பு வடகிழக்கினை சேர்ந்த தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.தமிழர்கள் சுயகௌரவத்துடனும் தமது பண்பாட்டு, கலை கலாசாரவிழுமியங்களைப்பேணிதமது பகுதிகளை தாமே ஆள்வதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டிய பாரிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

இதன்காரணமாகவேவடகிழக்கில்பொதுக் கட்டமைப்பு ஒன்றின் அவசியம் குறித்து இலக்கு இதழ் ஊடாக தொடர்ச்சியாக வலியுறுத்திவந்தேன். சிவில் சமூகத்தினை ஒன்றிணைத்து தமிழ் தேசிய அரசியலை தீர்மானிக்கும் வகையில் இந்த பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்ற கருத்து நீண்டகாலமாக தமிழ் மக்கள் மத்தியில் இருந்துவருகின்றது.

கடந்த காலத்தில் அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்பட்டதே தவிர சிவில் சமூகத்தினைக்கொண்டு கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான எந்த முயற்சிகளும் முன்னெடுக்கப்படவில்லை.

வடகிழக்கினைப்பொறுத்த வரையில் இன்று தமிழ் தேசிய அரசியல் பரப்பில் செயற்படும் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகள் என்பது தமிழ் தேசியத்தின் வீழ்ச்சிக்கு பாரிய பங்காற்றிவருகின்றது.பாகன்இல்லாயானைபோல வடகிழக்கில் தமிழ் தேசிய அரசியலில் ஈடுபடும் அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

இவ்வாறான நிலையில் வடகிழக்கில் தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்படும் அத்துமீறல்களுக்கு எதிரான குரல்கள் வலுவிழந்த நிலையிலேயே காணப்படுகின்றன.அண்மையில் தையிட்டி விகாரை அமைக்கப்பட்ட சம்பவம் உட்பட பல்வேறு அத்துமீறிய செயற்பாடுகளுக்கு தமிழ் தேசியத்தில் செயற்படும் அரசியல் கட்சிகள் தமது பலத்தை மட்டுமே காட்ட முற்பட்டார்களே தவிர தமிழர்கள் பகுதியில் முன்னெடுக்கப்படும் அத்துமீறல்களை தடுத்து நிறுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை.

இதுவொரு பாரிய குறைபாடாகவே வடகிழக்கில் இருந்துவருகின்றது.பொதுவான கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டு அது மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தும்போதுதான் தமிழ் தேசிய அரசியல் என்பது சரியான ஒழுங்குபடுத்தப்பட்டகட்டமைப்புக்குள்கொண்டு வரமுடியும் என்பது அனைவரது கருத்தாகவும் இருக்கின்றது.

வடகிழக்கில்இந்தபொதுக்கட்டமைப்பின் அவசியம் என்பது முக்கியம் என்பதை விட கிழக்கு மாகாணத்தில் இந்த பொதுக் கட்டமைப்பின் அவசியம் நீண்டகாலமாக கோரப்பட்டுவருகின்றது.கிழக்கு மாகாணம் இன்று பல வழிகளிலும் தமிழர் இருப்பினை இழந்துவருகின்ற நிலையில் கிழக்கில் தமிழர்களின் இருப்பினை பலப்படுத்தவேண்டிய பாரிய பொறுப்பு தமிழ் தேசியபரப்பில் உள்ளவர்களுக்கு உள்ளது.

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமே ஓரளவு தப்பிப்பிழைத்து இருக்கின்ற போதிலும் இன்று அங்கு பல்வேறு அத்துமீறிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றினை பாதுகாப்பதற்கு தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உள்ளவர்கள் முயற்சிகளை முன்னெடுக்கின்ற அதேநேரம் ஏனைய மாவட்டங்களான திருகோணமலையும் அம்பாறை மாவட்டமும் கைவிடப்பட்ட நிலையிலேயே இருக்கின்றன.இரண்டு பக்கங்களில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் மீதான அழுத்தங்களும் அத்துமீறல்களும் அதிகரித்துவருகின்றன.

இவ்வாறான நிலையில் மக்கள் சிந்தனை மையம் என்னும் அமைப்பின் ஊடாக வடகிழக்கில் பொதுக்கட்டமைப்பினை உருவாக்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.வடக்கில் கிளிநொச்சியில் எதிர்வரும் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பிலும் இதற்கான முதல்கட்ட பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.இரண்டு மாவட்டங்களிலும் சமகால அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்த கலந்துரையாடல்களுக்கு தமிழ் தேசியம் சார்ந்து செயற்படும் பொது அமைப்புகள் மற்றும் தனி நபர்கள்,ஊடகவியலாளர்களுக்கு அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.



திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இமானுவேல் அடிகளார்,தென்கையிலை ஆதினம்அகத்தியர்அடிகளார்மற்றும்வடகிழக்கில் உள்ள பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் தமிழ் தேசிய பரப்பினை ஆதரித்து நிற்கும் விரிவுரையாளர்கள்,பேராசிரியர்கள் இதன்போது கூட்டங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.




இவ்வாறான கலந்துரையாடல் எதிர்காலத்தில் பலமான பொதுக்கட்டமைப்பினை உருவாக்கும் என்பதில் நம்பிக்கை துளிர்விட்டுள்ளது.எவ்வாறாயினும் இவ்வாறான கட்டமைப்புகள் உருவாக்கத்தின்போது கிழக்கு மாகாணம் தொடர்பில் ஏற்பாட்டாளர்கள் அதிகளவில் சிந்திக்கவேண்டிய நிலையில் உள்ளது.

கிழக்கில் இன்றைய தமிழ் தேசிய அரசியல் என்பது வெறுமனே தமிழ் தேசியத் திற்குள் இருப்பவர்களின் போட்டி அரசியலாக மட்டுமே உள்ளது.அதுவும் தமது அரசியலை தக்கவைப்பதற்காக எந்த பேயுடனும் சேர்ந்து செயற்படுவதற்கு இந்த தமிழ் தேசிய அரசியல் வாதிகள் என்று சொல்லிக்கொள்வோர் முனைவது கவலைக்குரியதாகும்.

அண்மையில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தல்கள் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஏற்பட்ட பிளவினால் கிழக்கில் இரு பிரிவுகளாக பிரிந்து நின்றவர்களில் ஒருசாரார் தமிழ் தேசியத்திற்கு எதிரான வகையில் செயற்பட்டவரும் பிள்ளையான் போன்றவர்களுடனும் இணைந்து செயற்படுவதற்கு தயாராகியதுதான் கிழக்கின் தமிழ் தேசியத்தின் பெரிய சாபக்கேடாக மாறியிருக்கின்றது.கடந்த காலத்தில் தமிழ் தேசியத்திற்கு எதிராக செயற்பட்டவர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு என்ற கட்டமைப்புடன் இணைத்ததன் எதிரொலியாக கூட இது இருக்கலாம் என்பதே இன்றைய மக்களின் கருத்தாகவுள்ளது.

இவ்வாறான நிலையிலேயே இந்த பொதுக்கட்டமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிழக்கு மாகாணத்திற்கான கூட்டம் மட்டக்களப்பில் நடைபெறும்போது இதில் கிழக்கின் நிலைமைகள் குறித்து விரிவாக ஆராயப்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவுள்ளது.இதன்மூலம் எதிர் காலத்தில் கிழக்கு மாகாணத்தின் தமிழர்களின் இருப்பினைபாதுகாப்பதற்கானஅடித்தளம்ஒன்றை இடவேண்டும் என்பதே தமிழ் தேசிய அரசியலை நேசிப்பவர்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இதனை தவிர்த்து தமிழ் தேசிய அரசியல் பரப்பில் போட்டி அரசியலுக்குள் மூழ்கியுள்ளவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கினைப்பெற்றுக்கொடுக்கும் கூட்டமாக மட்டும் முடிந்துவிடக்கூடாது.

வடக்கினை விட இன்று கிழக்கு மாகாண தமிழ் தேசியம் நெருக்குவாரங்களுக்குள் சிக்கி - சின்னாபின்னமாகிக்கொண்டிருக்கிறது.

கிழக்கில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் முழுமையாக கலந்துரையாடப்பட வேண்டும்.அடுத்ததாக தமிழ் தேசிய அரசியல் கட்டமைப் பினை பலப்படுத்துவதற்காக முழுமையாக மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்தும் வகையிலான சிவில் சமூக கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும்.அதன்மூலம் வலுவான தமிழ் தேசிய கட்டமைப்பு கிழக்கில் உருவாக்கப்படவேண்டும் என்பதுடன் அது கிழக்கு மாகாண தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தவேண்டும்.வெறுமனே தமிழ் தேசிய அரசியலை மட்டும் முன்னிறுத்தி முன்னெடுக்கும் எந்தவித பொதுக்கட்டமைப்பும் தமிழ் மக்களுக்கு எந்தவித நன்மையினை மேற்கொள்ளாது என்பதுடன் அதன் மூலம் தமிழர்களின் இருப்பினையும் பாதுகாக்கமுடியாது.

வடகிழக்கில் சிவில் சமூக கட்டமைப்பு உருவாக்கப்படுவதற்கு சமாந்தரமாக புலம் பெயர் நாடுகளில் உள்ள அனைத்து தமிழ் தேசியத்தை நேசிக்கும் அமைப்புகள் மற்றும்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்



# மனிதப் புதைகுழி விவகாரம் அச்சத்தை தோற்றுவித்துள்ளது

## இலங்கையின் சமூக செயற்பாட்டாளர் **இந்திக பெரேரா**வுடன் ஒரு நேர்காணல்

**கேள்வி:**

**இனவாத நிலைமைகள் இலங்கையின் அபிவிருத்திக்கும், நல்லிணக்கச் சூழலை கட்டியெழுப்புவதற்கும் தடையாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றதே!**

**பதில்:**

உண்மைதான்.இனவாதம் என்பது மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயமாகவுள்ளது.இனவாதத்தை கையில் எடுத்தவர்கள் இனவாதத்தாலேயே வீழும் நிலை ஏற்படும் என்பதை மறுப்பதற்கில்லை.இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு (1948) முன்னரும் சரி, சுதந்திரம் பெற்ற பின்னரும் சரி இனவாத விதைப்பிற்கு ஒரு போதும் குறைவிருக்கவில்லை. சிறுபான்மை மக்கள் இனவாதத்தால் பல்வேறு துன்ப துயரங்களையும் கடந்த காலத்திலும் சமகாலத்திலும் அனுபவிக்கும் வரலாறு மிகவும் கொடுமையானதாகும்.இனவாதத்தால் இலங்கை சவால்கள் பலவற்றையும் சந்தித்துள்ளது.இதன் தொடர்ச்சி இன்னும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றது.நாட்டின் அபிவிருத்தி மட்டுமல்லாது சர்வதேசத்தின் முன்னால் இலங்கை தலை குனிவதற்கும் இனவாத முன்னெடுப்புக்களே ஏதுவாகின என்பது யாவரும் அறிந்த விடயமாகும். இவ்வாறாக இனவாதம் தீமைகள் பலவற்றுக்கும் அடிப்படையாக இருந்தபோதும் இனவாத சிந்தனையாளர்கள் இன்னும் இனவாதத்தால் கற்றறிந்த பாடங்களை கருத்தில் கொண்டு திருந்துவதாக இல்லை என்பது வருந்தத்தக்க விடயமாகவே தென்படுகின்றது.

இனவாத முன்னெடுப்புக்கள் காரணமாக ஐக்கியம் மிக்க நாட்டை கட்டியெழுப்புவதில் பெரும் இடர்பாடுகள் எதிர்கொள்ளப்படுகின்றன."இலங்கையர்" என்ற பொது வரையறைக்குள் காரியமாற்றுமிடத்து பிரச்சினைகள் பலவற்றுக்கும் இலகு வழியில் தீர்வினைக் கண்டுவிட முடியும். எனினும் இனம்,மதம்,சாதி என்றும் மொழி ரீதியாகவும் பிரிந்து நிற்கையில் தீமைகள் பலவும் மேலோங்குவதைத் தவிர்க்க முடியாது.

இலங்கை இன்னும் பல்வேறு அபிவிருத்தி இலக்குகளையும் அடைய வேண்டியுள்ளது.கொரோனாவின் தாக்கம் மற்றும் அரசியல்வாதிகளின் எதேச்சாதிகார போக்குகள் என்பன நாட்டின் பொருளாதாரத்தை அதளபாதாளத்திற்கு தள்ளியுள்ளன.பலர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்க்கை நடாத்துகின்றனர். மூன்று வேளை உணவை ஒரு வேளை உணவாக சுருக்கிக் கொண்ட குடும்பங்களும் நாட்டில் அநேகம் உள்ளன.போஷாக்கின்மை அதிகரித்து காணப்படும் நிலையில் பாடசாலைகளில் மாணவர் இடைவிலகலும் இடம்பெறுகின்றது. கலாசாரத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயனுள்ள விடயங்களை சமூகத்திற்கு பெற்றுக் கொடுப்பது கல்வி.மனிதனிடையே மறைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர்வது கல்வி என்று கல்விக்கு வரைவிலக்கணம் கூறுவார்கள்.இந்நிலையில் பூரணத்துவம் மிக்க கல்வியினைப் பெற்றுக் கொள்ள முடியாமல் பல மாணவர்கள் இடர்படுவதையும் இங்கு கூறியாக வேண்டும். இதனால் கல்வி நிலை பெரும் பாதிப்பை எதிர் நோக்குகின்றது.



இந்நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி எல்லா துறைகளிலும் உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு ஒற்றுமை அவசியமாகின்றது.எனினும் இனவாத சிந்தனையாளர்கள் இதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருவது வேதனைக்குரிய விடயமாகும்.இலங்கை பல்லின மக்களும் வாழ்கின்ற ஒரு அழகான நாடாகும்.ஒரு மலர் தனியாக இருப்பதை விட பல மலர்களும் இணைந்து கொத்தாக இருப்பதே அழகாகும்.இந்த வகையில் இலங்கையில் பல்லின மக்களும் வாழ்கின்றமை ஒரு அழகாகும்.இங்கு அனைவரும் சம உரிமைகளைப் பெற்றுக்கொள்ள உரித்துடையவராவர்.எனவே அனைத்து இன மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

**கேள்வி:**

**இலங்கையின் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக என்ன கூற விரும்புகின்றீர்கள்!**

**பதில்:**

இவ்விடயம் தொடர்பில் நாம் ஆழமாக நோக்க வேண்டியுள்ளது.இலங்கையில் முப்பதாண்டு கால கொடிய யுத்தம் இடம்பெற்றது. யுத்தம் பல்வேறு துன்ப துயரங்களையும் நாட்டில் ஏற்படுத்தியது.நாட்டின் அபிவிருத்திக்கு தோள் கொடுக்க வேண்டிய இளம் சமூகத்தினர் இரு தரப்பிலும் உயிரிழக்க நேர்ந்தது.நாட்டின் சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல துறைகளிலும் வீழ்ச்சி கண்டதோடு பொருளாதாரமும் ஆட்டம் கண்டது.இதன் தழும்பில் இருந்து நாடு இன்னும் மீளவில்லை.நாட்டின் தேகத்தில் யுத்தத் தழும்புகள் ஆழமாகவே பதிந்துள்ளன.

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் பலர் காணாமல் போயுள்ளமை உண்மையாகும். இவர்களில் பலர் குறித்து இன்னும் சரியான விவரங்களை அறிந்து கொள்ள முடியாதுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.இவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? அல்லது உயிரிழந்து விட்டனரா? என்பதனை அறிந்து கொள்ள முடியாதுள்ளது. காணாமல் போனோர் அலுவலகம் ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோதும் நிலைமைகளில் இன்னும் பூரண அபிவிருத்தியைக் காண முடியவில்லை.காணாமல் போனோரின் குடும்பங்கள் இன்று கண்ணீரும் கம்பலையுமாக அழுது புலம்புவது நெஞ்சை உருக்கும் ஒரு நிகழ்வாக உள்ளது.இந்நிலையில் காணாமல் போனோர் தொடர்பில் விரிவானதும் ஆக்கபூர்வமானதுமான முன்னெடுப்புக்கள் அவசியமாகவுள்ளது.இதன் மூலம் காணாமல் போனோரின் குடும்பங்களின் பிரச்சினைகளுக்கு பரிகாரத்தை பெற்றுக் கொடுக்க முடியும்.

இது இவ்வாறிருக்கத்தக்கபோது இலங்கையில் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் வலுவாக பேசப்பட்டு வருகின்றது.மனிதப் புதைகுழிகளை தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.அண்மையில் முல்லைத்தீவு, கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் விடுதலைப் புலிகளின் சீருடையாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்ற விதமாக கண்டுபிடிக்கப்பட்ட எச்சங்கள் தொடர்பிலான மேலதிக அகழ்வுப் பணிகள் இடம்பெற்றிருந்தன. இதன்போது மேலும் பல எலும்புக் கூடுகளும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறியக் கூடியதாகஉள்ளது.அதேநேரம்பிளாஸ்ரிக்பொருள், வயர் உள்ளிட்ட சில சான்றுப் பொருட்களும் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் மனிதப் புதைகுழி விவகாரம் ஒரு அச்ச சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது என்பதை மறுத்துவிட முடியாது. இதன் தாக்க விளைவுகளை உடனடியாக கூறுவதற்கில்லை. பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

**கேள்வி:**

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்குமா?**

**பதில்:**

இலங்கையின் இனப்பிரச்சினை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# ஈழத்தமிழருக்கான சிறப்புப் பிரதிநிதியை ஐக்கிய நாடுகள் சபை நியமித்து அவர்களின் பாராளுமன்றவாத வளர்ச்சிக்கு உதவுங்கள்

## அனைத்துலக பாராளுமன்றவாத நாளில் பாராளுமன்ற உட்தொடர்புகள் ஒன்றியத்தின் கடமையை உணர்த்துவது நம் கடமை

சூ.யோ. பற்றிமாகரன்

1889ம் ஆண்டு யூன் 30ம் நாளில் 9 நாடுகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களைப் பாரிசில் ஒன்று கூட்டிய பிரான்சைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரற்றிக்பாசி ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வில்லியம் இரண்டல் கிரிமர் ஆகியோரின் முயற்சியால் அனைத்துலகப் பாராளுமன்ற ஒன்றியம் முதன் முதலில் உருவானது. இதனை நினைவிருத்தும் வண்ணம் 2018ம் ஆண்டு முதல் அனைத்துலகப் பாராளுமன்றவாத நாள் ஐக்கிய நாடுகள் சபையால் ஒவ்வொரு ஆண்டும் யூன் 30ம்நாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஈழத்தமிழர்கள் உலகில் பாராளுமன்றவாதம் தொடங்கப்பெற்ற நாளில் இருந்து பாராளுமன்ற ஆட்சி முறை மக்களாட்சிக்கான சிறந்த கட்டமைப்பாக வளர்ச்சி அடையத் தங்களால் இயன்ற பங்களிப்புக்களைச் செய்த முன்னோடிகளாக உள்ளனர். ஈழத்தமிழர்களின் பாராளுமன்ற ஆட்சி முறையின் தலைவர்களாக விளங்கிய இலங்கைக்காங்கிரசின் தலைவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசின் தலைவராக விளங்கிய ஜி.ஜி. பொன்னம்பலம் போன்ற ஈழத்தமிழ் அரசியல் முன்னோடிகள் உலகில் பாராளுமன்றவாதம் சிறக்கச் செய்த அளப்பரிய பங்களிப்புக்களைச் செய்தமையை உலகம் நன்கறியும். ஈழத்தமிழர்கள் மக்களாட்சி முறைமைகளுக்கோ அல்லது பாராளுமன்றவாதத்திற்கோ என்றும் ஆதரவு அளிக்கும் அரசியல் தன்மை கொண்டவர்களாகவே ஈழத் தமிழ் அரசியலை வளர்த்து வந்தனர். பிரித்தானியக் காலனித்துவம் ஈழத்தமிழர்களின் விருப்பு இன்றி தன்னிச்சையாக 1833இல் கோல்புறுக் கமரோன் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் வழி தாம் அகப்படுத்திய ஈழத்தமிழர்களின் யாழ்ப்பாண அரசின் இறைமையையும் தாம் நேரடியாகக் கைப்பற்றிய, வன்னிச் சிற்றரசின் இறைமையையும் தாம் கைப்பற்றிய கண்டி கோட்டே அரசுகளின் இறைமைகளுடன் ஒன்றாக இணைத்து தமது இராணுவ சந்தை நலன்களுக்காக 'சிலோன்' அரசாங்கம் என்ற செயற்கையான ஒற்றையாட்சி சட்டசபை ஆட்சி முறைமையை உருவாக்கினர். ஆயினும் தமிழ்த்தேசியத்தினதும் சிங்களத் தேசியத்தினதும் தனித்துவங்களை உணர்ந்து சிங்களவர்களுக்கு ஒரு பிரதிநிதியையும் தமிழர்களுக்கு ஒரு பிரதிநிதியையும் சட்டசபைக்கு 1910 இல் பிரித்தானிய சட்டவாக்க சபைக்கு முதன்முதலில் நடத்தப்பெற்ற ஆங்கிலம் படித்த சொத்துள்ளவர்களின் வாக்குரிமை மூலமான தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன். இவ்வரலாற்றுச் சம்பவம் சிங்கள மக்களது இறைமையையும் பாதுகாக்கும் பொறுப்புள்ளவர்களாக ஈழத்தமிழர்கள் பாராளுமன்ற அரசியலில் விறளங்கினர் என்பதற்கான சான்றாகிறது.



ஆயினும் 1921களின் பின்னர் மன்னிங் சீர்திருத்தத்தின் மூலம். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பிரித்தானிய காலனித்துவ ஆட்சி அறிமுகம் செய்து பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக மக்களின தனித்தனியான இனமொழிமத பிரதேசக் கட்சி அரசியல் முறைiயினை இலங்கைப் பாராளுமன்ற வளர்ச்சிக்குள்கொண்டுவந்தது. இதனால்1921களில் தமிழ்த்தேசியவாதம் பாராளுமன்ற முறைமையுள் தன்னை தனி அரசியல் அடையாளமாக முன்னெடுத்து ஈழத்தமிழர்களது தேசியத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை 102 ஆண்டுகள் ஈழத்தமிழர்கள் தங்களது தாயக தேசிய தன்னாட்சி உரிமைகளைப் பாராளுமன்றவாத ஆட்சி முறைவழி அடைவதற்கான ஈழத்தமிழ்த்தேசிய அரசியல் போராட்டத்தைத் தொடர்ந்து வருகின்றனர்.



1931இல் டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் சிலோனுக்கு பிரித்தானியா மட்டுப்படுத்தப்பட்ட பொறுப்பாட்சியைக் கொடுத்த பொழுது மக்கள் தொகை எண்ணிக்கையில் 18 வயதடைந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற நிலை ஈழத்தமிழர்களை அவர்கள் இறைமையுள்ள தேசமக்கள் என்ற வரலாற்று உண்மைக்கு மாறாக சிறுபான்மையினர் என்ற தவறான அரசியல் அடைமொழிக்குள் கொண்டு வந்தமையே இன்றைய ஈழத்தமிழின இனப் படுகொலைகளுக்கான சிங்கள பௌத்த அரசியல் தோன்ற மூலகாரணமாக அமைந்தது. அத்துடன் தனிச்சிங்கள அமைச்சரவை தோன்றி ஈழத்தமிழர்களின் நிர்வாகத்தன்மை மேல் சிங்கள பௌத்த பேரினவாதம் மேலாண்மை செய்யவும் வழிவகுத்தது.

பிரித்தானிய காலனித்துவ அரசாங்கம் ஈழத்தமிழர்களின் விருப்புக்கு மாறாக இந்தியாவில் செய்தது போன்று அரசியலமைப்பு நிர்ணய சபையை நியமித்துச் சுதந்திரம் கொடுக்காது ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவராக இருந்த டி எஸ் சேனநாயக்கா என்ற தனிமனிதனுடனான தொடர்பாடல்கள் வழி ஈழத்தமிழர்களின் அரசியல் தலைமையாக விளங்கிய அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் இலண்டன் சென்று ஈழத்தமிழர் உரிமைகைளக் குறித்துப் பேச முயன்ற நிலையிலும் அவரைக் குடியேற்றநாடுகளுக்கான செயலாளரைச் சந்திக்க அனுமதிக்காது சோல்பரி அரசியல் அமைப்பின் மூலம் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக்குள் ஈழத்தமிழர்களின் இறைமையையும் இணைத்து 04.02. 1948 இல் சுதந்திரம் வழங்கியதால் காலனித்துவத்துகாலத்துத் தீர்க்கப்படாத அனைத்துலக நாடுகளின் மன்றத்தால் தீர்க்க்ப்பட வேண்டிய பிரச்சினையாக ஈழத்தமிழர் தேசிய பிரச்சினை இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.



தமிழ்த்தேசிய மக்கள்கட்சியின்தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் இன்றும் ஈழத்தமிழர்கள் தன்னாட்சி உரிமையப் பயன்படுத்த இயலாத எல்லைகளில் வாழும் மக்களாக வாழ்கின்றனர் என்ற இந்த உண்மையை இவ்வாண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் எடுத்து விளக்கி, ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதியை ஈழத்தமிழர்களின் நாளாந்த வாழ்வின் நிர்வாகத்தை முன்னெடுக்க நியமிக்குமாறு கேட்டார். இதனை உலகப் பாராளுமன்ற உட்தொடர்பு ஒன்றியமும் கவனத்தில் எடுத்து, ஈழத்தமிழர்களுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதியை நியமிக்க உதவி, ஈழத்தமிழர்களின் பிரிக்கப்பட இயலாத அவர்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்கள் தங்களுக்கான அரசியல் எதிர்காலத்தை அமைத்து பாராளுமன்றவாத ஆட்சியில் சிறப்புற உதவுமாறு ஒவ்வொரு ஈழத் தமிழனும் கோரவேண்டும்.

• • •

# விடுதலைப் புலிகள் இலங்கையில் தடை என்பது தர்க்கரீதியாக ஏற்கமுடியாது..!

பா.அரியநேத்திரன்

விடுதலைப்புலிகள் என்ற பெயர் இலங்கையில் தடைசெய்யப்பட்டதா? என்றால் எல்லோரும் ஆம் என்றுதான் பதில் கூறுவார்கள் ஆனால் அதில் எனக்கு சந்தேகம் உள்ளது எனது வாதம் "விடுதலைப்புலிகள்" என்பது இலங்கையில் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதே எனது விடை.

**அதை தர்க்க ரீதியாக நான் முன்வைக்கும் ஆதாரங்களை கவனமாக படியுங்கள்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பு அவர்கள் 2009, மே 18ல் தாம் இலங்கையில் இருந்து முற்றாக அகற்றிவிட்டோம் என்று இலங்கை அரசு கூறும் அதேவேளை அந்த பெயரை அதாவது "தமிழீழ விடுதலைப்புலிகள்" என்ற பெயரை இலங்கையில் எவருமே கூறமுடியாது அப்படி கூறினால் எழுதினால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்பதே நாம் அறிந்த உண்மை வரலாறுகள்.

அப்படியானால் "தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்" என்ற பெயர் சட்டரீதிகாக இலங்கை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது அல்லவா? அது எப்படி?

**இதில் கவனிக்க வேண்டியது அவதானமா ஒருதடவை வாசியுங்கள்..**

1. **தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற வசனத்தில் "தமிழீழம்" என்ற சொல்மட்டுமே உச்சரிக்கவோ பேசவோ இலங்கையில் தடையா என்ற சந்தேகம் எழுகிறது.**

2. **தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் என்ற வசனம் இலங்கையில் தடையில்லை அது தேர்தல் திணைக்களத்தால் அங்கிகரிக்கப்பட்ட பெயர்.**

இந்த இரண்டு விதமான வசனங்களையும் கூர்ந்து அவதானிப்போமானால் "தமிழீழம்" என்பது தடை "தமிழ்மக்கள்" என்பது தடையில்லை ஆனால் ஏனய "விடுதலைப்புலிகள்" என்ற வசனம் இலங்கை அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெயர் என்பது தெளிவாக உணர்ந்து கொள்ளலாம். அப்படியானால் விடுதலைப்புலிகள் தடையில்லை என்பதுதானே உண்மை.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்து 2004 இல் பிரிந்து சென்ற கருணா என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு.

தமிழீழ விடுதலைப்புலிகள. இலங்கையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் சார்பில் வட்டுக்கோட்டை தீர்மானம் தனி தமிழ் ஈழம் என்ற கோரிக்கையை 1976, மே,14, தமிழர் விடுதலைக்கூட்டணி மூலமாக தந்தை செல்வாவால் முன்வைக்கப்பட்டது. இந்ததீர்மானத்தின் பின்னர் 36, விடுதலை இயக்கங்கள் இலங்கை தமிழர்களிடத்திலிருந்து ஆயுதம் ஏந்தி பல இயக்கங்கள் உருவாகின. அவற்றில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும் 2009, மே,18,வரை போராடி முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட இயக்கம் என்பது முக்கியமான ஒன்று. அந்த விடுதலை இயக்கம் பாரிய முப்படைகளை கொண்ட மிகப் பெரிய விடுதலை இயக்கமாக இலங்கையில் முப்பது வருடங்களாக இயங்கிய ஒரு மரபுப்படை அணியாகும். இந்த இயக்கமானது 1990களின் பின்னர் மிகப்பெரிய இராணுவ பலத்தினை கொண்ட இயக்கமாக வலுவடைந்தது இந்திய அமைதிப்படையுடனும் முதலாம் கட்ட ஈழப்போரை நடத்திய வல்லமை அந்த இயக்கத்துக்கு மட்டுமே உண்டு .

அதனை தொடர்ந்து 2004ஆம் ஆண்டின் பின்னர் இவ் இயக்கமானது தனக்குள்ளே ஒரு பிளவை எதிர்கொள்ள நேர்ந்தது அந்த இயக்கத்தை பிரிப்பதற்காக அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்காவால் மேற்கொள்ளப்பட்ட சதியால் பிளவு ஏற்பட்டது என்பதை அவரே 2020,ல் கூறியும் இருந்தார் அதை "கிழக்குபிளவு" என அப்போது அழைக்கப்பட்டது.

இந்த கிழக்கு பிளவில் இருந்து கிழக்கு மாகாணத்தை சேர்ந்த கருணாகுழுவினரை அடிப்படையாகக் கொண்டு வன்முறைகளை கைவிட்டு தாம் ஜனநாயகப் பாதையில் பயணிப்பதற்காக ஒரு புதியகட்சி ஒன்று உருவாக்கப்பட்டது என விடுதலைப்புலிகளில் இருந்து பிரிந்த கருணா அந்த காலப்பகுதியில் ஊடக்கங்களில் கூறியிருந்தார்.

கருணாவால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியானது 2008, ஜனவரி,23,ல் அன்று இலங்கையில் ஒரு அரசியல் கட்சியாக இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்துகொண்டது. அதன் பெயரே "தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி" சின்னமாக அப்போது புலியின்தலை குறிப்பிட்டு பின்னர் புலியை எடுத்துவிட்டு படகு அந்த கட்சியின் சின்னமாக மாற்றப்பட்டது.

அந்த கட்சியானது கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயக உரிமைகள் மீதும் உண்மையான நேசம் கொண்டவர்களாவர் என தன்னை வெளிப்படையாக கூறினாலும் தமிழ்தேசிய அரசியலுக்கு எதிரான பிரதேசவாத அரசியல் செய்யும் கட்சியாகவே அதன் செயல்பாடுகள் அந்த கட்சி ஆரம்பித்த 2008, ஜனவரி,23, தொடக்கம் இன்றுவரையும் நாம் காணக்கூடியதாக உள்ளது. அந்த கட்சியின் யாப்பில் வெளிப்படையாக

* **இலங்கையின் இறைமையினையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாக்க எமது கட்சி போராடும்.**
* **இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களின் சமத்துவ உரிமைகளுக்காக எமது கட்சி உழைக்கும்.**
* **கிழக்கு மாகாணத்தின் தனித்துவ அரசியல் சுதந்திரத்திற்காகவும் இன நல்லுறவிற்காகவும் கட்சி பாடுபடும்.**
* **எமது தேசத்தின் தேசிய பொருளாதாரத்தை கட்டி எழுப்பவும் அதனூடாக உழைக்கும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தவும் கட்சி முன்னிற்கும்.**

மேற்படி கட்சியின் செயற்பாடுகள் ஊடாக இன, மத, மொழி, சாதி, பால், வர்க்க, பிரதேச வேறுபாடுகளை களைந்து இலங்கையை ஒரு மதச் சார்பற்ற நாடாகவும் இலங்கையர்களை ஒரு சமத்துவ சமுதாயமாகவும் உருவாக்குவதே தமது இலக்கு ஆகும் என குறிப்பிட்டாலும் உண்மையில் வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராக பிரதேசவாத கருத்துக்களை கிழக்கில் வாழ் தமிழ் மக்கள் மத்தியில் பரப்பும் அரசியற்செயற்பாடுகளே தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

2008,ல் கிழக்கு மாகாண சபை தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு போட்டியிடக்கூடாது என்பதற்காக அந்த கட்சி உறுப்பினர்களால் கிழக்கு மகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டம் தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள் என பலருக்கு எதிராக பல வன்முறைகள் இடம்பெற்ற வரலாறுகளை நாம் மறக்கமுடியாது.

விடுதலைப்புலிகள் என்ற பெயரில் 1974, தொடக்கம் 2009,மே,18, வரை ஒரு ஆயுதப்போராட்ட அமைப்பாக செயல்பட்ட விடுதலைப்புலிகள் என்ற பெயர் இலங்கையில் தடை அதேவேளை அந்த போராட்ட அமைப்பில் இணைந்து செயல்பட்டு அவர்களை காட்டிக கொடுத்து அதில் இருந்து பிரிந்து 2008,ஜனவரி,23,ல் அதே விடுதலைப்புலிகள் என்ற சொல்லை பிரதி செய்து ஆரம்பித்த (தமிழ்மக்கள்) விடுதலைப் புலிகள் இலங்கையில் தடை இல்லை.

எனவே இதில் இருந்து பொதுவாக நாம் கவனிக்க வேண்டியது "விடுதலைப்புலிகள்" எனும் பெயரை அரசாங்கத்துடன் ஒட்டி இருப்பவர்கள் பாவிப்பதில் தடை இல்லை, அரசுக்கு எதிரானவர்கள் அந்த பெயரை பாவித்தால் தடை இதுதான் நாம் கவனிக்கவேண்டிய விடயமாகும்.

ஏற்கனவே 2008,ஜனவரி,23,ல் விடுதலைப் புலிகளில் பிரிந்து சென்ற கருணாவால் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் எனும் பெயரில் கட்சி ஆரம்பிக்கப்பட்டாலும் தற்போது கருணா அந்த கட்சியில் இல்லை அவர் தற்போது பல்வேறு அரசாங்க தரப்பு கட்சிகளுடன் இணைந்து தமது அரசியலை மேற்கொள்கிறார்.

தற்போது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தற்போதய இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் என்பவரே தலைவராகவும், பூ.பிரசாந்தன் செயலாளராகவும் கொண்டு அந்த கட்சி செயல்படுவதை காணலாம்.

தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கையில் மட்டுமல்ல உலகத்தில் பலநாடுகள் தடைசெய்து அதனை பயங்கரவாத இயக்கமாக சித்தரித்தாலும் விடுதலைப்புலிகள் வைத்த பெயரை இலங்கையில் அவர்களுக்கு எதிரானவர்கள் அவர்களில் இருந்து விலகி அரசுடன் செயல்படுபவர்கள் அந்தப்பெயரை மங்கவிடாமல் ஒருவகையில் அவர்கள் காப்பாற்றியுள்ளனர் என்பதை இதன் மூலமாக புரிய முடிகிறது அல்லவா?

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்

# கேள்விக்குறியாகும் தொழில் பாதுகாப்பு

துரைசாமி நடராஜா

பெருந்தோட்டத் தேயிலைத் தொழிற்றுறையின் சவால்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில் இத்துறையின் எதிர்காலம் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் இருந்து வருகின்றமையும் தெரிந்ததேயாகும். இத்துறையின் வீழ்ச்சிக்கு பல கார ணிகள் வலுச்சேர்த்து வரும்நிலையில் தொழிலாளர்களுக்கான தொழில் பாதுகாப்பின்மையும் பிரதான காரணியாக விளங்குகின்றது. தேயிலைத் தோட்டங்கள் உரிய பராமரிப்பின்றி பற்றைக் காடாக மாறிவரும் நிலையில் தொழி லாளர்கள் தொழில் புரிவதற்கே அச்சம் கொண்டுள்ளனர். இந்நிலையில் தொழிலாளர்கள் மாற்றுத் தொழில்களை நாடிச் செல்வதற்கும் இந் நிலைமை உந்து சக்தியாகியுள்ளது. .

இலங்கையில் தேயிலைத் தொழிற்றுறை நாட்டின் முதுகெலும்பாக விளங்கிய காலமொன்றிருந்தது. இத்தொழிற்றுறையை நம்பி நாடு வீறுநடை போட்டது. அந்நிய செலாவணி உழைப்பில் தேயிலையின் பங்களிப்பு கணிசமாக இருந்தது. இதனடிப்படையில்1959 ம் ஆண்டு அந்நிய செலாவணி உழைப்பில் தேயிலையின் பங்களிப்பு 59.6 வீதமாக இருந்தது. இது1969இல் 57.8, 1976இல் 43.6, 1978இல் 48.5, 1982 இல்29.6, 1986இல் 27.2, 1988இல் 26.2, 1989 இல்24.3, 1990இல் 24.9 என்றவாறு அமைந்திருந்தது. இலங்கையில் 1985இல் இரண்டு இலட்சத்து 31 ஆயிரத்து 650 ஹெக்டயர் பரப்பிலே தேயிலை பயிர்ச்செய்கை இடம்பெற்றது. இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் 1965 ம் ஆண்டு வரை தேயிலை உற்பத்தி அதிகரித்துச் சென்றது. 1972ம் ஆண்டிலும் உற்பத்தி உச்ச நிலையை அண்மித்திருந்தது. 1946இல் 125 மில்லியன் கிலோ கிராம் தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. அது படிப்படியாக வளர்ந்து 1965இல் 228.6 மில்லியன் கிலோகிராமாக உயர்வடைந்திருந்தது. எனினும் நிலச் சீர்திருத்தத்தின் பின்னர் படிப்படியாக வீழ்ச்சியுற்று 1982இல் 187.8 மில்லியன் கிலோ கிராமாக தேயிலை உற்பத்தி இடம்பெற்றது. இதேவேளை 1989இல் 9 வீத வீழ்ச்சியினைப் பெற்றிருந்ததாக புத்திஜீவிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் தேயிலைத் தொழிற்றுறையின் ஆதிக்கம் தொடர்பில் பேசுகின்றபோது மலையக பெருந்தோட்டங்களை புறந்தள்ளிவிட்டு பேச முடியாது. தொழிலாளர்கள் தம்மை வருத்திக் கொண்டு நாடுயரப் பாடுபட்டு வருகின்றனர். இலங்கையின் தேசிய வருமானத்தில் பெருந்தோட்டத் துறை அதிகளவு பங்குவகித்தது. இதற்கேற்ப 1995 இல் 168.8 மில்லியன் கிலோ கிராம் தேயிலையை பெருந்தோட்டங்கள் உற்பத்தி செய்தன. இது 2000 இல் 100.1, 2005 இல் 111.5, 2010 இல் 100.8, 2017 இல் 104 மில்லியன் கிலோ கிராமாக அமைந்திருந்தது. பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையில் அதிகளவான தொழிலாளர்கள் ஈடுபட்டுழைத்தனர். தேயிலைப் பெருந்தோட்டங்களில் பதிவு செய்திருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை நோக்குகையில் அது பின்வருமாறு அமைந்திருந்தது. 1980இல் 541,971 தொழிலாளர்கள் தேயிலைப் பெருந்தோட்டங்களில் பதிவு செய்து கொண்டிருந்தனர். 1985இல் 458,617, 1990இல் 408,784, 1995இல் 302,743, 2000இல் 277,886, 2005இல் 246,478, 2010இல் 212,826, 2015இல் 158,322 தொழிலாளர்கள் தேயிலைப் பெருந்தோட்டங்களில் பதிவு செய்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த - எண்ணிக்கை தொடர்ச்சியாக சரிவடைந்து வரும் நிலையில் தற்போது தோட்டங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது.

பெருந்தோட்டத் தொழிற்றுறையில் நிலவும் பல்வேறு கெடுபிடிகள், ஊதியப் பற்றாக்குறை, தொழிலாளர்களின் நலன்கள் பேணப்படாமை, தொழிலாளர்களின் நியாய மானகோரிக்கைகள்புறக்கணிக்கப்படுகின்றமை, தேயிலை விளைநில காணிச் சுவீகரிப்பு, தோட்ட குடியிருப்பு பிரச்சினைகள் போன்ற



பல காரணிகள் பெருந்தோட்டத்துறையின் எதிர்காலத்தை சூனியமாக்கி வருகின்றன. பெருந்தோட்டத் தொழிற்றுறையின் நகர்வுகள் தொழில்நுட்ப மாற்றம் மற்றும் விருத்திக்கேற்ப மாற்றியமைக்கப்படாத நிலையில் பாரம்பரிய முறைகளைக் கையாண்டு வருவதும் இத் தொழிற்றுறையின் வீழ்ச்சிக்கு ஏதுவாகி இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இத்தகைய பல நிலைமைகள் இன்றைய இளைஞர்களுக்கு ஒரு ஈர்ப்பினை அல்லது கவர்ச்சியினை இத்தொழிற்றுறையின்மீது ஏற்படுத்தவில்லை. பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தன் பெற்றோர் துன்புறும் வேதனைகள் பிள்ளைகளின் கண்முன்னே நிழலாடுகின்றன. ஒரு முன்மாதிரியான தொழிலாக பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை காணப்படவில்லை. இதனால் பிள்ளைகள் இத்தொழிற்றுறையை வெறுத்தொதுக்குவது நியாயமானதே என்பது பலரின் கருத்தாகவுள்ளது. இதேவேளை பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறையின் வீழ்ச்சிக்கும், தொழிலாளர்களின் இத்துறை மீதான நாட்டமின்மைக்கும் மற்றொரு காரணமாக தொழிலாளர்களுக்கான தொழில் பாதுகாப்பின்மை விளங்குகின்றது. தொழிலாளர்களின் தொழில் உரிமைகளை பேணும் பொருட்டும், தொழில் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டும் சட்டங்கள் பலவும் காணப்படுகின்றன. எனினும் இவை ஏட்டளவில் காணப்படும் நிலையில் இவற்றின் செயற்படுதன்மை கேள்விக்குறியாகிவருகின்றது. இதேவேளை இந்திய சந்திப்புடனான தோட்டத் தொழிலாளர்களுடைய நலன்களின் பொருட்டு ஆரம்பிக்கப்பட்ட தொழில் சட்டமானது கிரமமான வழிகளில் பொதுவான இலங்கையரின் தொழிலாளர் வகுப்புக்காக நடைமுறைப்படுத்தும் விதத்தில் வியாபிக்கப்பட்டது. ஆனால் துரதிஷ்டவசமாக இந்த சட்ட விதிகளை விதிக்கும் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுக்கொள்கை பின்பற்றப்படாததுடன்அநேகமாகஅந்தந்தசந்தர்ப்பங்களில் நிலவிய சிற்சில நிலைமைகளை மாத்திரம் கருத்தில்கொண்டு சட்டம்தயாரிக்கப்பட்டுள்ளது என்றொரு குற்றச்சாட்டும் வழக்கறிஞர்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அச்சத்தில் தொழிலாளர்**

கம்பனியினரின் இலாபத்தை மட்டுமே மையப்படுத்திய முன்னெடுப்புக்கள் தொழிலாளர்களை அதளபாதாளத்தில் தள்ளி வருகின்றன. இன்று பல தோட்டங்கள் தொழில் புரிவதற்கேற்ற நிலைமையினைக் கொண்டிருக்கவில்லை. பாம்பு மற்றும் விஷ ஜந்துக்கள் பலவும் வசிக்கின்ற ஒரு இடமாக பெருந்தோட்ட தேயிலை விளைநிலங்கள் மாறியுள்ளன. காட்டழிப்பு நடவடிக்கைகள் பல இடங்களிலும் வேகமாக இடம்பெற்று வரும் நிலையில் இருப்பிட வசதியில்லாது சிறுத்தை போன்ற விலங்குகளின் இருப்பிடமாகவும் தேயிலை விளைநிலங்கள் மாறியுள்ளன இத்தகைய நிலைமைகளால் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலுக்கு செல்வதற்கு அச்சம் கொண்டுள்ளனர். விலங்குகள் மற்றும் விஷ ஜந்துக்களால் எப்போதும் தமக்கு இடையூறு நேரக்கூடும் என்று இவர்கள் கருதுகின்றனர். போதாக்குறைக்கு மலையக பகுதிகளில் குளவிக் கூடுகள் அதிகமாக காணப்படுகின்றன. தேயிலை மலைகளிலும் பாடசாலை மற்றும் தொழிலாளர்களின் குடியிருப்பிற்கு அண்மையிலும் பெரிய மரங்களில் குளவிக்கூடுகள் காணப்படுகின்றன. இதன் காரணமாக பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் முதல் தேயிலைத் தொழிலுக்கு செல்லும் தொழிலாளர் வரை மிகுந்த அச்சத்தை பலரும் எதிர்கொண்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது. .

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் அடிக்கடி குளவித்தாக்குதலுக்கு உள்ளாகும் பல தரப்பினரினதும் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகின்றது. இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கிலான செயற்பாடுகள் அரிதாகவே காணப்படுகின்றன. தோட்ட நிர்வாகமும் இது தொடர்பில் தமது அசமந்தப் போக்கினையே தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. நிர்வாகத்தின் இந்த அசமந்தப்

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# “வரதட்சணையின் காரணமாக பல ஆண்களால் நான் நிராகரிக்கப்பட்டிருக்கிறேன்”

தமிழில்: ஜெயந்திரன்

இந்தியாவில் 1961ம் ஆண்டிலிருந்து வரதட்சணை (சீதனம்) சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இருப்பினும் மணமகளது பெற்றோர்பணம், ஆடைகள், நகை போன்றவற்றை மணமகனது குடும்பத்துக்கு இன்றும் கொடுக்க வேண்டிய சூழல் இருக்கிறது.

“திருமணக் கொண்டாட்டங்கள் நடைபெறும் இடங்களில், காவல்துறை அதிகாரிகளை அமர்த்தி, அவ்வாறான இடங்களில் திடீர்ச்சோதனைகளை நடத்தி, இந்தச் சமூகத் தீமைக்கு ஒரு முடிவுகட்ட வேண்டும்” என்ற ஒரு கோரிக்கையை, இந்தியாவில் மையத்தில் இருக்கின்ற ஒரு நகரமான போபாலில் (Bopal) ஆசிரியராகப் பணிபுரியும் 27வயது நிரம்பிய ஒரு பெண் முன்வைத்திருக்கிறார்.

வரதட்சணையை மையமாக வைத்து, பல ஆண்களால் தான் நிராகரிக்கப்பட்டதாக குண்ஜன் திவாரி என்ற பெயரில் அழைக்கப்படும் இப்பெண் (இது அவரது சொந்தப்பெயர் அல்ல) குறிப்பிடுகிறார்.

குண்ஜன் என்ற இந்தப் பெண்ணுக்கு ஒரு மணமகனைத் தேடும் முயற்சியில் அவரது தந்தை கடந்த பெப்பிரவரி மாதம் ஓர் இளைஞனையும் அவனது குடும்பத்தினரையும் தனது வீட்டுக்கு அழைத்திருந்தார்.

பெண் பார்க்க வந்தவர்களுடன் வழமை போல நலம் விசாரித்து முடிந்த பின்னர், விருந்தினர்களுக்கு பரிமாறவென, கொதிக்கின்ற தேநீரையும் சில சிற்றுண்டிகளையும் ஒரு தட்டில் ஏந்தியவாறு குண்ஜன் அவர்கள் அனைவரும் கூடியிருந்த விறாந்தைக்குள் நுழைந்தார்.



“அது ஒரு பதற்றம் நிறைந்த தருணம்” என்று அதனை அவர் விவரிக்கிறார்.

“எல்லோரும் உங்களையே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் உங்களை எடைபோட்டுக்கொண்டிருக்கிறார்கள்” என்று தனது வீட்டில் இருந்துகொண்டே அலைபேசியில் அவர் என்னுடன் உரையாடினார்.

பெண் பார்க்க விருந்தினர்கள் வருகின்ற பொழுது குண்ஜன் எப்பொழுது, எப்படி அவர்கள் முன் காட்சி தரவேண்டும் என்பது தொடர்பாக அவர்கள் மிக நுணுக்கமாகத் திட்டமிட்டிருந்தார்கள். பச்சை நிற ஆடை குண்ஜனுக்கு மிகவும் அழகாக இருக்கும் என்று கருதிய அவரது தாய், அன்றைய நாளுக்காகப் பச்சைநிறத்தினாலான ஓர் ஆடையை அவருக்காக வாங்கியிருந்தார். அவரது பற்கள் வெளியே தெரிந்துவிடும் என்ற காரணத்தால் அந்த நேரத்தில் குண்ஜன் சிரிக்கக் கூடாதென்று அவரது தாய் அவருக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தார்.;

இந்த விடயம் குண்ஜனுக்கு மிகவும் பழக்கப்பட்ட ஒரு விடயமாக இருந்தது. கடந்த பல வருடங்களில், ஆறு தடவைகள் இவ்வாறான அனுபவம் குண்ஜனுக்கு ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் அவரிடம் கேட்ட கேள்விகள் கூட பரிச்சயமானவையாகவே இருந்தன. அவரது கல்வித்தகைமைகள், அவரது வேலை மற்றும் அவரால் உணவு சமைக்க முடியுமா என்பவை தான் அந்தக் கேள்விகள்.

குண்ஜன் விருந்தினர்கள் அமர்ந்திருந்த அறைக்குள் நுழைய முன்னர், தங்களிடம் வரதட்சணையாகஎவ்வளவுபணத்தைஎதிர்பார்க்கிறார்கள் என்று குண்ஜனின் மணமகனாக அமையக் கூடியவரின் தந்தையிடம் குண்ஜனின் தந்தை கேட்டார். 5 மில்லியன்களிலிருந்து 6 மில்லியன்கள் ரூபாய்களை அவர்கள் கேட்பதாக குண்ஜன் அறிந்தார். எனது தந்தை அவரிடம் கேட்ட பொழுது, “உங்களது மகள் அழகானவளாக இருந்தால் நாங்கள் கேட்கும் தொகையைக் குறைப்போம்” என்று அவர் கூறினார்.

அவரது உரையாடல் தொடர்ந்த பொழுது, அங்கு எந்தத் தள்ளுபடியும் கொடுக்கப்பட மாட்டாது என்பதையும் குண்ஜன் அறியக் கூடியதாகவிருந்தது. அவரது சமமற்ற பற்கள் தொடர்பாகவும், அவரது நெற்றியில் உள்ள ஓர் வளர்ச்சி தொடர்பாகவும் அவரிடத்திலே அவர்கள் விசாரித்திருந்தார்கள்.

“வரதட்சணைக்காகத் தான் அவரைத் திருமணம் செய்ய விரும்பவில்லை” என்று குண்ஜனைத் திருமணம் செய்வது தொடர்பாகப் பரிசீலனை செய்ய அங்குவந்திருந்த அந்த இளைஞனிடம் குண்ஜன் கூறினார்.

“சமூகத்திலே நிலவுகின்ற ஒரு தீமை அது” என்பதை அந்த இளைஞன் ஏற்றுக்கொண்டிருந்தார். அந்த வகையில் தான் முன்னர் சந்தித்திருந்த இளைஞர்களை விட அவர் வித்தியாசமாக இருப்பதாக குணஜன் நினைத்தார்.

ஆனால் அந்தக் குடும்பத்தால் குண்ஜன் நிராகரிக்கப்பட்டதாக குண்ஜனின் குடும்பத்தினர் விரைவில் அறிந்துகொண்டார்கள்.

“நான் வரதட்சணையை எதிர்ப்பதே அவர்கள் தன்னை நிராகரித்ததற்கான காரணம் என்று குண்ஜனின் தாய் குண்ஜனிடம் தெரிவித் திருந்தார். இது தொடர்பாக அவரது தாய் அவருடன் கடுங்கோபத்தில் இருந்ததாகவும் இரண்டு வாரங்களாக தன்னோடு எதுவும் பேசவில்லை என்றும் குண்ஜன் தெரிவித்தார்.



கடந்த ஆறு வருடங்களாக குண்ஜனின் தந்தை, திருமணமாகாத 100க்கும் 150க்கும் இடைப்பட்ட ஆண்களின் குடும்பங்களைத் தொடர்புகொண்டதோடு, 25 இளைஞர் வரை நேரடியாகச் சந்தித்துமிருந்தார். வரதட்சணையைக் காரணமாக வைத்து அவர்கள் எல்லோருமே கை விரித்துவிட்டார்கள்.

இவ்வாறாகப் பல தடவைகள் நான் நிராகரிக்கப்பட்டதன் காரணத்தினால், “எனது தன்னம்பிக்கையைக்கூட நான் இழந்துவிட்டேன்” என்று கணித பாடத்தில் முதுமாணிப்பட்டத்தைப் பெற்று தற்போது இணையத்தில் வகுப்புகளை நடத்திவரும் குண்ஜன் கவலையுடன் கூறினார்.

“தர்க்கரீதியாகச் சிந்திக்கும் போது, என்னிலே எந்தக் குறையும் இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் சீதனத்தை எதிர்பார்ப்பவர்களால் தான் பிரச்சினை. எனது பெற்றோருக்கு இப்போது நான் ஒரு சுமையாக வந்துவிட்டதாக உணர்கிறேன்.”

வரதட்சணையைக் கேட்பதும் அதனைக் கொடுப்பதும் கடந்த 60 வருடங்களாகச் சட்ட விரோதமான விடயங்களாக இருந்த போதிலும், அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வின்படி, 90 வீதமான இந்தியத் திருமணங்களில் சீதனம் கொடுக்கப்படுகிறது என்பது நிரூபணமாயிருக்கிறது. 1950ம் ஆண்டுக்கும் 1999ம் ஆண்டுக்கும் இடையே வரதட்சணையாகக் கொடுக்கப்பட்ட தொகையைக் கூட்டிப்பார்த்தால், அது ஒரு ரிறில்லியன் (Trillion) டொலர்களின் கால்வாசியைப் பகு தியை உள்ளடக்கியதாக விருக்கும்

பெண்பிள்ளைகளை வைத்திருப்பவர்களின் பெற்றோர் சீதனத்துக்காக பாரிய கடனைப் பெற்றுக் கொள்ளகிறார்கள். சிலவேளைகளில் அவர்கள் தங்களிடமிருக்கும் காணிநிலத்தையும் வீட்டையும் கூட விற்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அப்படிக் கொடுத்தாலும் கூட மணமகளுக்கு ஒரு மகிழ்ச்சியான வாழ்வு அமையும் என்பதில் எந்த உத்தரவாதமும் கிடையாது.

குறைவான வரதட்சணையைக் கொடுத்ததற்காக 2017க்கும் 2022க்கும் இடையே 35,493 மணப்பெண்கள் கொல்லப்பட்டதாக, தேசிய குற்றவியல் ஆவணப் பணிமனை தெரிவிக்கிறது. இவ்வாறு பார்க்கும் போது, சராசரியாக ஒவ்வொரு நாளும் 20 பெண்கள் இந்தக் காரணத்துக்காகக் கொல்லப்படுகின்றனர்.

இந்தியாவில் ஆண்-பெண் பாலினங்களுக்கிடையேசமமற்றவிகிதாசாரம்இருப்பதற்குவரதட்சணையும் ஒரு காரணம் என்று அதற்கு எதிராகப் பரப்புரை செய்வோர் குறிப்பிடுகின்றார்கள். பெண் பிள்ளைகள் பிறந்தால் தாம் வரதட்சணை கொடுக்க வேண்டிவரும் என்று எண்ணும் பெற்றோரால் பிறப்புக்கு முன்னர் பாலினத்தை அறிவதற்காகச் செய்யப்படும் சோதனைக்குப் பின்னர், ஒவ்வொரு வருடமும் 400,000 பெண் கருக்கள் கருக்கலைப்புச் செய்யப்படுகின்றன என்று ஐக்கிய நாடுகள் கணிப்பீடு செய்திருக்கின்றது.




“திருமணங்கள் நடைபெறும் இடங்களைத் திடீர்ச்சோதனைக்கு உட்படுத்தி, வரதட்சணையைக் கொடுப்பவர்களையும் பெறுபவர்களையும் கைது செய்தவது தான் இதற்கான தீர்வாக அமையும்” என்று போபாலின் காவல்துறைத் துறையின் தலைவராகப் பணியாற்றுகின்ற ஹரிநாராயன் சரி மிஷ்ராவிடம் கொடுத்த தனது கோரிக்கையில் குண்ஜன் குறிப்பிட்டிருக்கிறார். தண்டனை கிடைக்கும் என்ற பயம் இந்தக் கொடுமையான செயற்பாட்டுக்கு ஒரு முடிவைக்கொண்டுவரும்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# சர்வதேச இளைஞர் திறன் நாளும் ஈழத்தமிழ் இளைஞர்களும்

## அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 15-ம் தேதி உலக இளைஞர் திறன் தினம் *(World Youth Skills Day)* கடைபிடிக்கப்படுகிறது. இளைஞர்களிடையே திறன்களை வளர்ப்பதன் மற்றும் முதலீடு செய்வதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் இது நிறைவேற்றப்பட்டது. வேலைவாய்ப்பு, தொழில்முனைவுமற்றும்கண்ணியமானவேலைவாய்ப்புகளுக்குதேவையான திறன்களுடன் இளைஞர்களை தயார்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துக்காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக இளைஞர் திறன் தினத்தின் கருப்பொருள் ஒவ்வொரு ஆண்டும் மாறுபடும், இது திறன் மேம்பாடு மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரமளித்தல் ஆகியவற்றின் பல்வேறு அம்சங்களை மையமாகக் கொண்டுள்ளது. பல்வேறு நிகழ்வுகள், பிரச்சாரங்கள் மற்றும் முன்முயற்சிகள் மூலம், இளைஞர் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக அரசுகள் கல்வி நிறுவனங்கள், வணிக நிறுவனங்கள் மற்றும் இளைஞர் அமைப்புகள் உள்ளிட்ட பங்குதாரர்களை அவர்களின் திறன்களைப் பெறுவதற்கும் மேம்படுத்துவதற்கும் ஆதரவளிப்பதில் ஈடுபடுத்தவும் இந்த நாள் முயல்கிறது.

உலக இளைஞர் திறன் தினத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்று இளைஞர்களின் வேலையின்மையின் உலகளாவிய பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் *(International Labour Organization)* கூற்றுப்படி, தொழிலாளர் சந்தையில் நுழைவதில் இளைஞர்கள் எதிர்கொள்ளும் குறிப்பிடத்தக்க சவால்கள் உள்ளன, அதாவது தரமான கல்விக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகுமுறை, பொருத்தமான திறன்கள் இல்லாமை மற்றும் வேலை அனுபவத்திற்கான வரையறுக்கப்பட்ட வாய்ப்புகள். திறன் மேம்பாட்டின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலம், கல்விக்கும் வேலைவாய்ப்புக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது, இத்தகைய நடவடிக்கைகளின் ஊடாக தொழில் தேடுவதற்குத் தேவையான திறன்களை இளைஞர்கள் பெறுவதை உறுதிசெய்கிறது.

உலக இளைஞர் திறன் தினம் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியின் தரம் மற்றும் தகமையை மேம்படுத்தும் கொள்கைகள் மற்றும் முன்முயற்சிகளை செயல்படுத்த நாடுகளையும் அமைப்புகளையும் ஊக்குவிக்கிறது. திறன் மேம்பாடு ஒரு வாழ்நாள் செயல்முறையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை இது ஊக்குவிக்கிறது, மேலும் இளைஞர்கள் நடைமுறை திறன்கள் மற்றும் அறிவைத் தயார்படுத்தும் முறையான மற்றும் முறைசாரா கற்றல் வாய்ப்புகளை அணுக வேண்டும் என்று கூறுகிறது.

சமீபத்திய ஆண்டுகளில், உலக இளைஞர் திறன் தினம் முனைப்புப் பெற்றுள்ளது, உலகளவில் பல நிகழ்வுகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுகின்றன. இந்த நிகழ்வுகளில் பட்டறைகள், கருத்தரங்குகள், குழு விவாதங்கள், வேலைவாய்ப்பு கண்காட்சிகள் மற்றும் திறனை ஊக்குவிக்கும் கண் காட்சிகள் ஆகியவை அடங்கும். திறன் மேம்பாட்டிற்கான சிறந்த நடைமுறைகள், அனுபவங்கள் மற்றும் புதுமையான அணுகுமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும், பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும், இளைஞர்களின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கும் இந்த நாள் ஒரு தளத்தை வழங்குகிறது.

உலக இளைஞர் திறன் தினம் இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதிலும், வேலையின்மையைக் குறைப்பதிலும், நிலையான பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதிலும் திறன் மேம்பாடு வகிக்கும் முக்கிய பங்கை நினைவூட்டுகிறது. இளைஞர்களின் ஆற்றலைப் பயன்படுத்தவும், சமூகத்திற்கு திறம்பட பங்களிக்கவும் கல்வி, பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளில் விரிவான உத்திகள் மற்றும் முதலீடுகளின் அவசியத்தை இது கோடிட்டுக் காட்டுகிறது.

சிறிலங்காவில் மாறிமாறி ஆட்சியமைத்த சிங்கள அரசுகள் ஐக்கிய நாடுகள் சபையின் வரையறைகளையும் விதிகளையும் மீறி ஈழத் தமிழ் இயைஞர்களுக்கு ஓரவஞ்சனையே செய்துகொண்டு உள்ளது. ஈழத்தமிழ் இளைஞர்களுக்கு எதிரான அரசின் பாகுபாடு என்பது தமிழ்ச் சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் அரசாங்க நிறுவனங்களால் ஒதுக்கப்படுகின்றனர். அரச இனவாதக் கொள்கைகளால் எதிர்கொள்ளும் அநீதியான தாக்கங்கள், சமமற்ற வாய்ப்புகள், போன்றவை தமிழ் இளைஞர்களின் திறனை மழுங்கடிக்கின்றது. இந்த வகையான பாகுபாடுகள் பல்வேறு வழிகளில் வெளிப்படுகிறது உதாரணமாக கல்வி, புதிய கண்டுபிடிப்புகள், வேலைவாய்ப்பு, குற்றவியல் நீதி மற்றும் அடிப்படை சேவைகளுக்கான அணுகல்கள் உள்ளிட்ட அவர்களின் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களை பாதிக்கும் வகையில் உள்ளது.

சிறிலங்கா அரசால் தரமான பாடசாலை வளங்கள் மற்றும் கல்வி வாய்ப்புகளுக்கு சமமற்ற அணுகல் மூலம் கல்வியில் பாகுபாடு ஏற்படுத்தப்படுகின்றது. தமிழ்ப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்கு போதுமான நிதி வழங்காமை, தரமான மேம்பட்ட கல்விமுறையை மட்டுப் படுத்துவதன் மூலம் கல்வி தரத்திலும் புதுமையான சிந்தனைகள் ஏற்படவிடாமல் இடைவெளிகளை ஏற்படுத்தி அவர்களின் நீண்டகால வாய்ப்புகளைத் தடுத்தடுக்கிறது.

பணியமர்த்தல் செயல்முறையின் போது அல்லது பணியிடத்தில் பாரபட்சம் அல்லது பாரபட்சத்தை எதிர் கொள்ளும் போது தொழிலாளர் சந்தையில் ஏற்படும் பாகுபாடு தமிழ் இளைஞர்களை பாதிக்கிறது. ஒத்த தகுதிகள் மற்றும் திறன்களைக் கொண்டிருந்தாலும், சிங்களவர்களுடன் ஒப்பிடும்போது தமிழ் இளைஞர்கள் அதிகமாக வேலையின்மையால் பாதிக்கப்படுகின்றனர். இதனால் பல திறன் கொண்ட தமிழ் இளைஞர்கள் தொழில் முன்னேற்றம் மற்றும் ஊதிய ஏற்றத்தாழ்வுகளை அனுபவிக்க நேரிடுகிறது.

தமிழ் இளைஞர்கள் பெரும்பாலும் குற்றவியல் நீதித்துறையால் முறையற்ற வகையில் குறிவைக்கப்படுகின்றனர், விவரக்குறிப்பு மற்றும் கடுமையான நடத்தை ஆகியவற்றை எதிர்கொள்வதன் ஊடாக அவர்களின் ஆற்றல் நீர்த்துப்போச் செய்யப்படுகிறது. இனரீதியான விவரக்குறிப்பு, பாரபட்சமான தண்டனை மற்றும் நியாயமான சட்ட பிரதிநிதித்துவத்திற்கான அணுகல் இல்லாமை ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படுவதால் தமிழ் இளைஞர்களின் திறன் திட்டமிட்டு நசுக்கப்படுகின்றது.

தமிழ் இளைஞர்கள் சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் பாதிக்கப்படுவதுடன், பாதுகாப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகுமுறைகள் இன்றி போதைப்பொருள் துஸ்பிரயோகத்திற்கு அரச பாதுகாப்புப் படைகளால் உட்படுத்தப்பட்டு ஆளுமையற்ற தலைமுறையாக உருவாக்கும் முயற்சிகள் முனைப்புப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் இளையோர் மத்தியில் போதைப்பொருள் துஸ்பிரயோகத்தை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களை ஒரு திறன் அற்றவர்களாக ஆக்கி ஒரு வளர்ச்சியற்ற சமூகமாக தங்களைச் சார்ந்து நிற்கும் இனமாக வைத்திருப்பதோடு, தமிழர்களை சிங்கள ஏகாதிபத்தியத்தின் அடிமைகளாக வைத்திருப்பதே சிங்கள அரசின் எதிர்காலத் திட்டமாகும்.

*-அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை-*
*ஸ் ரீ ப ன் புஸ்பராஜா (பேச்சாளர்)*



## மனிதப் புதை ... தொடர்ச்சி ...

“பிச்சைக்காரனின் புண்ணைப் போன்று” புரையோடிப்போய் இருக்கின்றது.இலங்கையின் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும் என்று திடமாக நம்பப்பட்டது.சர்வதேச நாடுகளும் இது குறித்து தனது கவனத்தை செலுத்தி இருந்தன.எனினும் இது சாத்தியப்படாத நிலையில் இதய சுத்தியுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா? என்பது குறித்து சந்தேகங்கள் மேலெழுந்துள்ளன.

இலங்கையின் பிரச்சினைக்கு தீர்வாக 13 ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்டு மாகாணசபைகள் ஏற்படுத்தப்பட்டன. தமிழ் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. எனினும் இந்நடவடிக்கை தீர்வினை பெற்றுக் கொடுக்கவில்லை.இதேவேளை பின்னரான காலப்பகுதியில் 13 ஆவது திருத்தம் முன்வைக்கப்பட்டு காலங்கடந்துள்ளதால் 13 ஐயும் விஞ்சிய தீர்வு குறித்து ஆலோசிக்கப்பட்டது. இலங்கைக்கு அப்போது வருகை தந்திருந்த இந்திய பிரதமரும் 13 ஐயும் விஞ்சிய தீர்வை வலியுறுத்திப்பேசி இருந்தார்.இந்நிலையில் 13 ஆவது திருத்தத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களையே வழங்காத ஆட்சியாளர்கள் எவ்வாறு 13 ஐயும் விஞ்சிய தீர்வை வழங்கப் போகிறார்கள் என்று புத்திஜீவிகள் சிலர் சந்தேகத்தையும் வெளியிட்டிருந்தனர்.

பின்நாளில் இந்த சந்தேகம் நியாயமாகி இருந்தது.தமிழ் மக்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு பெற்றுக் கொடுக்கப்படாத நிலையில் இழுத்தடிப்பு நடவடிக்கைகளையே அவதானிக்கக் கூடியதாக இருந்தது.இது விரும்பத்தக்கதல்ல. தமிழ் மக்கள் உள்ளிட்ட சகல மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் உடனடித் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டு அனைவரும் ஒற்றுமையுடன் கை கோர்க்க வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.அனைத்து இனங்களினதும் ஐக்கியத்தின் ஊடாக இலங்கைத் திருநாட்டை மீளவும் கட்டியெழுப்ப ஆட்சியாளர்கள் உறுதி பூண வேண்டும்.இதன் மூலம் ஒருவரையொருவர் சந்தேகக்கண்கொண்டு பார்க்கும் நடவடிக்கைக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனலாம்.

**கேள்வி:**

**உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

**பதில்:**

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்ப்புகள் பலவும் வெளிக்கிளம்பி வருகின்றன. இதன் மூலம் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் நாட்டின் ஏனைய தொழிலாளர்களும் பாதிக்கப்படுவர்.ஆகவே நடுத்தர மக்களை பாதுகாப்பதற்கான கடன் சீரமைப்பு முன்னர் பிரதான நிலை வர்த்தகர்கள், செல்வந்தர்கள் மற்றும் அரச வங்கிகளிடம் இருந்து பெற்றுக் கொண்டுள்ள 1300 பில்லியன் ரூபா கடன்களை மீளப் பெற்றுக் கொள்ள நிதியமைச்சு விசேட கவனம் செலுத்த வேண்டும் என்று வலியுறுத்தல்கள் இடம்பெற்று வருகின்றன.மேலும் கடன் மறுசீரமைப்பினால் தொழிலாளர்களின் 12 ட்ரில்லியன் ரூபா குறைக்கப்படுவதாக எதிர்க்கட்சியும் தெரிவித்துள்ளது. எனினும் விமர்சனங்களை மறுத்துள்ள அரசு இக்கடன் மறுசீரமைப்பு யாருக்கும் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று கூறி வருகின்றது.மேலும் சர்வதேச கடன் மறுசீரமைப்பில் எதிர்மறைத் தாக்கம் வராது என்றும் வலியுறுத்தியுள்ளது.

எவ்வாறெனினும் கடன் மறுசீரமைப்பு தொழிலாளர்களுக்கு பலத்த அடியாக அமையக் கூடும் என்றே பொதுவாக எதிர்பார்ப்புகள் காணப் படுகின்றமையும் இங்கு குறிப் பிடத்தக்கதாகும்.

**நேர்கண்டவர் :- துரைசாமி நடராஜா**

## இலங்கையில் மனி ... தொடர்ச்சி ...

19 50 ஆம் ஆண்டுக்கு முற்பட்டவை என கூறப்பட்டது இதற்கு காரணம் வேறு எச்சங்கள் அனுப்பப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது ஆனால் அது தொடர்பிலான மேலதிக விசாரணைகள் நடத்தப்படாமல் நிறுத்தப்பட்டதோடு; பொலீஸ் .நிலையங்களில் சம்பவம் நடந்த காலப்பகுதியில் ஐந்து வருடத்திற்கு உட்பட்ட பொலிஸ் அறிக்கைகளை அகற்றி விடுமாறு கூறப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. அது மட்டுமல்ல ஆரம்பத்தில் மக்கள் விடுதலை விடுதலை முன்னணி இது தொடர்பாக ஆர்வம் காட்டிய போதும் இராணுவத்தினர் தண்டிக்கப்பட்டால் .தமது அரசியலுக்கு ராணுவத்தினர், அவர்களது குடும்பத்தினர், அவர்களது ஆதரவாளர்கள் வாக்குகளை பெற்றுக் கொள்ள முடியாத என்று சிந்தித்தன் காரண மாக அவர்களும் தொடர்ந்து விசாரணைக்கு நடைபெறுவதை விரும்பவில்லை.

செக்கிங் சிங்கிள்வர் சார்ந்த புதைகள் விடயமே அரசியல் சார்ந்து சிந்திக்கப்பட்டால் தமிழர் பதவி பகுதிகளில் அடையாள காணப்பட்ட புதைகுடிகளுக்கு தோண்டப்படும் படங்கள் சடங்கு ஆய்வுகளுக்கு விசாரணை என்ன நடக்கும் என்பதை எம்மால் ஒதுக்க முடியும் 1999 ஆம் ஆண்டு செம்மொழி புதைகுழி வெளிச்சத்துக்கு வந்த போது நானும் சடரங்கள் அங்கு புதைக்கப்பட்டதாக அக்கால பகுதியில் ஆக இருந்த சோமர் என்ன ராஜபக்சே என்பவர் சாட்சி கூறினார் இது தொடர்பாக ஆராய 5 பேர் கொண்ட ஆனை குழு இணைக்கப்பட்ட போதும் அது ஆணை குழுவின் அறிக்கை வெளியிடப்படவில்லை. இந்த அகழ்வின் போது தடயவியல் நிபுணர்ககளின் பங்கு இருந்தப் போதும் வல்லுனர்கள் பங்கெடுக்க வில்லை எனக் கூறப்படுகிறது. குற்றவாளிகளின் பாதுகாப்பு கருதி இவ் வழக்கு கொழும்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது பாதிக்கப்பட்டோர் தொடர்பில் அரசு சிந்திக்கவில்லை. செம்மணி பொதுக்குழு வழக்கில் சாட்சி கூறியவர் தொடர்ந்தும் ஹாய் தண்டனை அனுபவித்து வருகின்ற போது அவரால் குற்றத்திற்கு காரணமானவர்கள் என அடையாளம் காணப்பட்ட ஏனைய பணித்துறை சார்ந்தோர் விடுதலை பெற்றுள்ளனர்.

அதேபோன்று மிருசுவின் சமூகப் புதைக்குழி வழக்கு அது 14 ராணுவத்தினர் தடுத்து வைக்கப்பட்டனர் இவர்களின் வழக்கம் இவர்களின் பாதுகாப்பு கருதி அனுராதபுரத்திற்கும் பின்னர் கொழும்புக்கும் மாற்றப்பட்டது. இவ் வழக்கில் பெட்டநாயக்க என்பவருக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்ட போதும் 2020 ஆம் ஆண்டு ராஜபக்சே ஜனாதிபதி அதிகாரத்து பாவித்து பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டார். இவை சில உதாரணங்கள் மட்டுமே.

அதுமட்டுமல்ல விசாரணை செய்யும் அதிகாரிகள் நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படுவதும் வழக்குகளுக்கு நீண்ட காலம் இருப்பதுமாலை செயல்கள் தற்போது நிகழ்ந்து கொண்கையில் தமிழ் மக்களுக்கு காணாமல் போன துறவிலும் சமூக புதை குடிகள் தொடர்பிலும் உள்ளத விசாரணையில் நீதிக்கிட்ட போவதில்லை என்பது மட்டும் தெளிவு சர்வதேச சமூகம் திட்டமிட்ட வகையில் சமூகப் புதைகுழிகள் காணமலாக்கப்பட்ட விடயத்தில் தலையிட வேண்டும் என்பது அண்மையில் வெளிவந்த அறிக்கை சுட்டிக்காட்டும் செய்தியாகும்.

கிறிஸ்துவுக்கு முன் 800 ஆண்டுகளுக்கு முற்பட்ட புத்தரின் பல்லினை புனித சின்னமாக்கி அதற்கென்று பாரிய மாளிகை அமைத்து வருடம் தோறும் திருவிழா எடுத்து வருவது ஒவ்வொரு உயிரினமும் இறந்த பின்புறம் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என்பதை உலகிற்கு கூறும் விழாவாகும். அத்தகைய நாட்டில் அரசே சமூக கொலை செய்வதையும் அதனை மறைவாக புதைக்கப்பட்டவர்களின் உறவுகளை மரண வேதனை யில் வாழ விடுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

• • •

## கொக்குத்தொடு ... தொடர்ச்சி...

பணிகள் இடம்பெறவேண்டும் என்பதனை வலியுறுத்தியிருந்தனர்.

அதேவேளைஇலங்கைஅரசேஉன்கையில் ஒப்படைத்த உறவுகள் எங்கே, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி வேண்டும், கொக்குத் தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வில் கண்காணிப்பு வேண்டும், உள்ளிட்ட பதாதைகளைத் தாங்கியவாறும் கோசங்கைளை எழுப்பியும் ஆர்ப்பாட்டதில் ஈடுபட்டனர்.

## வடக்கில் சீனி ... தொடர்ச்சி ...

அவசரம் அவசரமாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

அத்தோடு, தொழிற்சாலையின் அமைவிடத்துக்கென கரும்புத் தோட்டங்களை அமைப்பதற்காக வும் முதற்கட்டமாக 74,100 ஏக்கர்கள் அளவு காணியை விடுவிக்கவும் அனுமதி வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை முன்னெடுத்துள்ள தரப்பினர், இது போரினால் பாதிக்கப்பட்ட வன்னி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கென வாராதுவந்த வரப்பிரசாதம் என்று இனிப்பாய் சிலாகித்து வருகின்றனர். ஆனால், இதன் உண்மைகள் மிகவும் கசப்பானவை. வடக்கில் சீனி தொழிற்சாலை, இனிப்பு தடவிய விஷம்.

அபிவிருத்தித் திட்டமொன்றை முன்னெடுக்கும்போது திட்டத்தின் பொருத்தப்பாட்டை அறிந்துகொள்ள நீர் அடிச்சுவடு என்ற நீர்த் தேவையே சூழலியல் குறிகாட்டியாக முதலில் கவனத்தில் கொள்ளப்படுகிறது.

கரும்பினதும் சீனியினதும் நீர் அடிச்சுவடு மிகவும் உயர்வானது. ஒரு கிலோ கரும்பை உற்பத்தி செய்வதற்கு 210 லீற்றர் தண்ணீரும் ஒரு கிலோ சுத்திகரிக்கப்பட்ட சீனியை உற்பத்தி செய்வற்கு 1780 லீற்றர் தண்ணீரும் தேவைப்படுகிறது.

கரும்பு வருடம் முழுவதும் நீர் பாய்ச்ச வேண்டிய ஒரு பல்லாண்டுப் பயிராகும். இவற்றின் அடிப்படையில் பேராறுகள் எதுவுமே இல்லாத வறண்ட வலயமான வடக்கில் பெருமளவு நீரை விழுங்கும் சீனி உற்பத்தியை முன்னெடுப்பது பேராபத்தாகும்.

நீர்ச் சமநிலையை குழப்பி அத்தியாவசிய உணவுப் பயிர்களின் உற்பத்தியிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும். ஈற்றில் அந்த மண்ணை பாலையாக்கிவிடும்.

## அணுக்கதிர்வீச்சு ... தொடர்ச்சி ...

கொண்ட கழிவு நீர் வெளியேறுகின்றது. ஆனால் அங்குள்ள சேமிப்பு தாங்கி யில் 1.3 மில்லியன் சதுரகன மீற்றர் நீரையே சேமிக்க முடியும். நீரை கடலில் கலப்பதற்கு 30 தொடக்கம் 40 வருடங்கள் எடுக்கும்.

கழிவுநீரில் உள்ள றிற்ரியம் மற்றும் கார்பன்-14 ஆகியவை அனைத்துலக தரத்திற்கு அமைவாக உள்ளதாக யப்பான் தெரிவித்துள்ளது. ஆனால் அது சூழலுக்கு ஆபத்தானது என யப்பானின் மீனவர் அமைப்புக்களும், சீனாவும் தெரிவித்து வருகின்றன. ஐ.நாவின் நடவடிக்கை பொறுப்பற்ற செயல் என சீனா மேலும் தெரிவித்துள்ளது. றிற்ரியம் என்ற கதிரியக்க இரசாயணம் மனிதர்களில் புற்றுநோயை ஏற்படுத்தும் என தெரிவிக்கப்படுகின்றது.

## கேள்விக்குறி ... தொடர்ச்சி ...

போக்கு தொழிலாளர்களுக்கு பெரும் இடையூறினை ஏற்படுத்தியுள்ளது.தோட்டங்களில் அண்மைக்காலமாக தொழில் புரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி நிலை ஏற்படுவதற்கு தோட்டங்களின் பராமரிப்பில் உரிய கவனம் செலுத்தப்படாமையும் பிரதான காரணமாகும் என்பதே உண்மையாகும். இந்நிலையால் தொழிலாளர்கள் மாற்றுத் தொழிலைத்தேடி கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடம்பெயர்கின்றனர்.இதேவேளை மலையக பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்று உழைப்பில் ஈடுபடுவதற்கு வறுமை ஒருபுறமிருக்க தொழில் பாதுகாப்பற்ற நிலைமைகளும் காரணமாகியுள்ளன.

உலகளாவிய ரீதியில் கொரோனா ஆட்டிப்படைத்த நிலையில் இலங்கையிலும் இதன் தாக்கமானது அதிகளவில் எதிரொலித்தது. எல்லா துறைகளும் முடக்க நிலையை அடைந்திருந்தன.ஆனாலும் பெருந்தோட்ட தேயிலைத் தொழிற்றுறை அப்போதும் இயன்றளவு இயங்கிக் கொண்டுதான் இருந்தது. நாட்டின் அபிவிருத்திக்கு தம்மாலான உச்ச கட்ட பங்களிப்பினை தொழிலாளர்கள் வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அந்த சந்தர்ப்பத்தில் கூட தொழிலாளர்களை கொரோனாவிலிருந்து பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்களை உரியவாறு முன்னெடுக்க பல தோட்ட நிர்வாகங்கள் தவறி இருந்தன.இது நன்றி மறந்த ஒரு செயலாகும்.தொழிலாளர்களின் உழைப்பில் காட்டிய ஆர்வத்தை அவர்களின் பாதுகாப்பில் காண்பிப்பதற்கு தோட்டங்கள் முன்வரவில்லை என்பது கசப்பான உண்மையாகும்.

பெருந்தோட்டங்கள் தொழிலாளர்களின் இதயத்தைப் போன்றனவாகும்.எனவே இவை அழிவிலிருந்தும் பாதுக்காக்கப்பட வேண்டும்.இதேவேளை தொழிலாளர்களின் சமூகக் கட்டமைப்பில் பல்வேறு மாற்றங்கள் இப்போது ஏற்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது.எனினும் இதனை மையப்படுத்தி. தோட்டங்களை முற்றாக கைகழுவி விடுவதற்கில்லை.தோட்டங்களை நம்பி இன்னும் பல தொழிலாளர்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.அவர்களின் பிழைப்புக்கு தோட்டங்கள் தோள் கொடுக்கின்றன. இந்நிலையில் தோட்டம் தொடர்பி லான இவர்களின் அபிலாஷைகளை சிதைத்து விடலாகாது. தொழிலாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி அதனூடாக தோட்டங்களின் இருப்புக்கு வலுசேர்க்க வேண்டியது அவசி யமாகும். இது குறித்து அரசாங்கத்திற்கும் மிகப் பெரிய பொறுப்புள்ளது.தொழிலாளர்கள் சிறுபான்மையினர் என்பதால் அவர்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் கருதி அரசாங்கம் செயற்படலாகாது.அத்தோடு மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகளுக்கும் இம்மக்களின் இருப்பினை உறுதிப்படுத்துவதில் அதிகூடிய பொறுப்புள்ளது.தமது அரசியல் இருப்பு மலையக மக்களின் இருப்பிலேயே தங்கியுள்ளது என்பதனை இவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

• • •

## ஆயுதப்போரா ... தொடர்ச்சி ...

தனிநபர்களை ஒன்றிணைத்து அங்கு விரிவான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும்.

புலம்பெயர் தேசத்தில் வலுவாக சிவில் சமூக கட்டமைப்பு ஒன்று உருவாகுமானால் வடகிழக்கில் தமிழ் மக்களுக்கான பாரிய பலமாக அது அமையும்.பல அத்துமீறல்களை தடுப்பதற்கான வழிவகைகளை அந்த கட்டமைப்பு மூலம் ஏற்படுத்தமுடியும்.

இன்று முன்னெடுக்கப்படும் இந்த செயற்றிட்டம் வெற்றிபெறுமானால் எதிர்காலத்தில் தமிழ் தேசியம் சார்ந்த வகையில் வடகிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் இருப்பினை உறுதியாக்கி முன்கொண்டுசெல்லக்கூடிய சூழ்நிலையுருவாகும்.இதனை உணர்ந்து அனைத்து தரப்பினரும் இதயசுத்தியுடன் இதில் பங்காற்ற முன்வரவேண்டும்.அதற்கான களத்தினை புலம்பெயர் தேசத்திலும் உருவாக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

## பொருளாதார ... தொடர்ச்சி ...

முடியும். இதற்கு அரசாங்கம் தற்போது நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்கும் ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் துணைபுரியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.

• • •

## இராணுவ முகாம் ... தொடர்ச்சி ...

இதனைவிட இங்குள்ள முக்கியமான இராணுவ முகாம்களில், குறிப்பாக வட்டுவாகல், கேப்பாப்புலவு, போன்ற இடங்களில் பாரிய புத்தவிகாரைகள் நிறுவப் பட்டுள்ளன.

ஆனால் அவ்வாறு பாரிய அளவில் இராணுவ முகாம்களில் விகாரைகள் அமைக்கவேண்டிய தேவையில்லை.

பல இராணுவ முகாங்களில் சிறிய அளவிலானவிகாரைகள்அமைக்கப்பட்டிருக்கும் போது கேப்பாப்புலவு, வட்டுவாகல் உள்ளிட்ட சில இராணுவ முகாம்களில் இவ்வாறு பாரிய அளவிலான விகாரைகள் நிறுவப்பட்டுள்ளதன் சூட்சுமம் என்ன?

இவ்வாறான இராணுவமுகாம்களில் அமைந்துள்ள விகாரைகளின் கீழ்பகுதிகளில், இறுதிக்கட்டப் போரில் சரணடைந்தவர்கள் படுகொலைசெய்யப்பட்டு, அவர்களின் சடலங்கள் புதைக்கப்புட்டுள்ளதா என்ற சந்தேகங்களும் எழுகின்றன.

எனவே இவ்வாறான இராணுவ முகாம்கள், இராணுவ முகாம்களிலுள்ள பாரிய விகாரைகளையும் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் அகழ்ந்து ஆராய்வதற்குரிய சந்தர்ப்பங்களும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஏன் எனில் யுத்தம் மௌனிக்கப்பட்டு சுமார்14ஆண்டுகளுக்கு மேலாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது காணாமல் ஆக்கப்பட் உறவுகளைத் தேடித் தொடர்ந்து போராடிவருகின்றனர். ஆனால் தொடர்ந்து மாறிவரும் அரசாங்கங்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு உரிய பதிலை வழங்குவதாகத் தெரியவில்லை.

இந் நிலையில் போர்மௌனிக்கப்பட்ட போது கையளிக்கப்பட்ட உறவுகளின் நிலை என்ன? அது தொடர்பில் இலங்கை அரசு இதுவரையில் முறையான பதிலை வழங்காததன் காரணமென்ன?

எனவே எமது மக்களின் வலியுணர்ந்து சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில், சர்வதேசத்தின் பங்களிப்புடன் நீதியானதும் நியாயமானதுமான விசாரணையை கோருகின்றோம். அதனடிப்படையில் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு - என்றார்

## ஆபிரிக்க நாடு ... தொடர்ச்சி...

இந்தியா 32 பில்லியன் கடன் உதவிகளை கடந்த 10 வருடங்களில் மேற்கொண்டுள்ளதாக இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி தெரிவித்துள்ளது. 12 பில்லியன் டொலர்கள் பெறுமதியான 195 புதிய திட்டங்களையும் ஆபிரிக்க நாடுகளில் இந்திய ஆரம்பித்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளின் 700 பில்லியன் டொலர் கடன் தொகையில் சீனா 12 விகித்தை கொண்டுள்ளதுடன், ஆபிரிக்க நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையிலான வர்த்தக்கம் கடந்த வருடம் 282 பில்லியன் டொலர்களை எட்டியுள்ளது. அது இந்த வரும் மேலும் 16 விகிதம் அதிகரித்துள்ளது.

## சங்காய் ... தொடர்ச்சி ...

பயங்கரவாத நடவடிக்கைகளை தடுத்து பிராந்தியத்தின் உறுதித்தன்மையை பேண வேண்டும் எனவும், ஆப்கானிஸ்தான் மண்ணில் அமைதி ஏற்படவேண்டும் எனவும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தள்ளார்.

கூட்டமைப்பு நாடுகளிடம் ஒற்றுமை அவசியம் எனவும், உலகில் இரு தரப்பும் வெற்றியீட்டும் நடவடிக்கைகளை கூட்டமைப்பு நாடுகள் மேற்கொள்ள வேண்டும் என சீனாவின் அதிபர் தெரிவித்துள்ளார்.

## அகதி முகாம் ... தொடர்ச்சி...

பலஸ்தீன தரப்பு தெரிவித்துள்ளது.

கடந்த ஏப்பிரல் மாதம் முதல் இஸ்ரேலிய படையினர் மேற்கு கரையில் உள்ள பகுதிகள் மீது தொடர் படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இஸ்ரேலிய படையினர் வெளியேறிய பின்னர் இஸ்ரேலின் நகரங்கள் மீது 5 உந்துகணைகள் ஏவப்பட்டதாகவும், ஆனால் அவற்றை வான்காப்பு படையினர் அழித்து விட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு இந்த முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கையின் போது முகாமின் அரைவாசி பகுதி அழிக்கப் பட்டதுடன், 50 இற்கு மேற்பட்டவர்கள் கொல்லபட்டிருந்தனர்.

## மென்கடத்திகள் .. தொடர்ச்சி ...

825 மில்லியன் டொலர்கள் முதலீடுகளை மேற்கொள்ள உடன் பட்டாலும், அது மென்கடத்திகளை பரிசோதிப்பது மற்றும் பொதி செய்யும் தொழில்நுட்பத்தையே வழங்கவுள்ளது. உற்பத்தி தொழில்நுட்டபத்தை வழங் கவோ உற்பத்தியை மேற்கொள்ளவே அது விரும்பவில்லை.

தற்போது தாய்வானின் ASE Technology நிறுவனமும், சீனாவின் JCET நிறுவனமுமே மென்கடத்திகள் விற்பனையில் சந்தைவாய்ப்பை பிடித்துள்ளன. அதன் உலக சந்தைவாய்ப்பு 2028 ஆம் ஆண்டு 51 பில்லியன் டொலர்களாக இருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

## விடுதலைப்புலி ... தொடர்ச்சி ...

இலங்கையில் விடுதலைப்புலிகள் தடை செய்யப்பட்ட பெயர் இல்லை என்பதை இந்த விடயங்கள் மீண்டும் மீண்டும் ஒரு வகையில் நிருபித்து விட்டதை சொல்லித்தான் ஆக வேண்டும்.

ஒருசாரார் விடுதலைப்புலிகளை அரசியலுக்காக பயன்படுத்தாலாம், இன்னொரு சாரார் விடுதலைப்புலிகளை பயன்படுத்தினால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை இந்த இரண்டு விதமான நிலைப்பாடுகள் இலங்கையில் எழுதப்படாத விதியாக உள்ளது என்பதை புரிதல் நல்லது.

• • •

## வரதட்சணையின் ... தொடர்ச்சி ...

என்று அவர் மேலும் தெரிவிக்கிறார். தான் முன்னெடுக்கும் போராட்டத்தில் தனக்கு உதவுமாறு கடந்த வாரம் திரு.மிஷ்றாவைச் சந்தித்து குண்ஜன் கேட்டிருக்கிறார்.

"வரதட்சணை எமது சமூகத்தில் நிலவுகின்ற ஒரு தீமை. அதனை முடிவுக்குக் கொண்டு வருவதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம். இதற்காக பெண்கள் யாராய் இருந்தாலும் அவர்களுக்கு உதவுமாறு சகல காவல்துறை நிலையங்களுக்கும் நான் கட்டளையிட்டிருக்கிறேன்" என்று மிஷ்ரா கூறினார்.

"ஆனால் காவல்துறையினருக்கும் சில வரையறைகள் உண்டு. அவர்களால் எல்லா இடத்துக்கும் செல்ல முடியாது. இந்த விடயம் தொடர்பாக அதிகமான விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களது சிந்தனைப்போக்கை நாங்கள் மாற்ற வேண்டும்" என்று மிஷ்றா கூறினார்.

காவல்துறையினரால் நிச்சயமாக உதவி செய்ய முடியும். ஆனால் வரதட்சணையைக் கட்டுப்படுத்துவது மிகவும் சிக்கலான ஒரு விடயம் என்று பெண்கள் உரிமைக்கான செயற்பாட்டாளரான கவிதா சிறீவாஸ்தவா தெரிவித்தார்.

"இந்தியா ஒரு காவல்துறை மாநிலம் அல்ல. ஆனால் வரதட்சணைத்தடை தொடர்பான ஒரு சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டம் முன்னரைவிட கடுமையான முறையில் அமுல்நடத்தப்பட வேண்டும்."

வரதட்சணை என்பது ஒரு தடவை கொடுக்கப்பட்டு முடிக்கப்படும் ஒரு கட்டணம் அல்ல. ஆனால் பேராசை பிடித்த குடும்பங்களும், மணமகன்களும் திருமணம் முடிந்த பின்னரும் மேலும் மேலும் தருமாறு கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஏனென்றால் அது இலகுவாகப் பெறப்படும் பணம். இவ்வகையில் ஒருவர் மிகவும் இலகுவாகப் பணக்காரர் ஆகிவிடலாம்.

இவ்வாறாக கேட்கப்படும் வரதட்சணையைக் கொடுக்க முடியாதிருக்கும் பெண்கள் பலர் குடும்ப வன்முறையைச் சந்திப்பதாகவும், தாம் திருமணம் முடித்த மணமகன்களின் வீடுகளிலிருந்து வெளியேற்றப்படுவதாகவும் செல்வி சிறீவாஸ்தவ தெரிவிக்கிறார்.

இளைஞர்களும், இளம்பெண்களும் தமக்கென உறுதியான ஒரு முடிவை எடுத்து, வரதட்சணையைப் பெறவும் கொடுக்கவும் மறுக்கும் போது தான் வரதட்சணை என்ற இந்தக் கசையடிக்கு ஒரு முடிவு பிறக்கும்.

"வாழ்க்கை நீண்டதாக இருப்பதன் காரணத்தினால் இந்த வாழ்க்கையைத் தனித்து வாழ நான் விரும்பவில்லை, எனவே திருமணம் செய்துகொள்ளவே நான் விரும்புகிறேன். ஆனால் வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்வதில்லை என்பதில் நான் உறுதியாகவே இருக்கிறேன்."

ஆனால் காலம் விரைவாகக் கடந்து கொண்டிருப்பதன் காரணத்தினால் குண்ஜனுக்கு விரைவாக ஒரு மணமகனைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று அவரது குடும்பத்தினர் ஆசிக்கின்றார்கள்.

எங்களது அயல் மாநிலமாக இருக்கின்ற உத்தரப்பிரதேசத்தின் ஏற்றாவா மாவட்டத்திலே எங்களது பூர்வீகக் கிராமம் இருக்கிறது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில் திருமணச் சந்தையில் 25வயதுப் பெண் வயது முதிர்ந்தவராகவே கணிக்கப்படுகின்றார்.

குண்ஜனின் தந்தையோ தினசரிச் செய்தித் தாள்களில் திருமணம் தொடர்பாக வருகின்ற விளம்பரங்கள் அனைத்தையும் ஒன்றையும் விடாது பார்த்துவருவது மட்டுமன்றி, பொருத்தமான வரனைக் கண்டால் தனக்குச் சொல்லும்படி தனது உறவினர்களையும் கேட்டிருக்கின்றார்.

தங்களது பிள்ளைகள் தொடர்பான விபரங்களைப் பகிர்ந்துகொள்ளும் அவரது சாதியைச் சார்ந்த 2000 பேர் கொண்ட ஒரு வட்ஸ்அப் (WhatsApp) குழுவில் அவர் ஓர் அங்கத்துவராக இருக்கிறார்.

கிட்டத்தட்ட 5 மில்லியன்கள் ரூபா செலவு செய்து கொண்டாடப்படும் ஒரு மிக ஆடம்பரமான திருமணத்தையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். எனது தந்தையைப் பொறுத்தவரையில் அதன் அரைப்பகுதியை மட்டுமே அவரால் கொடுக்க முடியும். உண்மையில் வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்வதில்லை என்ற தனது முடிவு தனது பெற்றோரின் வாழ்க்கையைக் கடினமாக்கி இருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

"எனக்கு ஒரு மணமகனைப் பார்க்கத் தொடங்கி, தற்போது ஆக ஆறு வருடங்களே ஆகின்றன. என்று எனது தந்தை கூறுகின்றார். ஆனால் வரதட்சணை கேட்காத ஒரு மணமகனைப் பார்ப்பதாக இருந்தால் 60 வருடங்கள் கடந்தாலும் எனக்கு ஒருவரைப் பார்க்க முடியாது என்று கூறுகிறார் எனது தந்தை."

**நன்றி: பிபிசி**

## புதுடில்லிக்குச்... தொடர்ச்சி ...

அல்லது 13 ஐ நடைமுறைப்படுத்த நாங்கள் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று துவங்கி எல்லாம் கருத்திலாக இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக அதற்கு சாதகமான தமிழ்கட்சி மூலமாக அந்த ஏற்பாடு இடம்பெறுகின்றன. ஆகவே 13 ஐ கடுமையாக நடைமுறைப் படுத்தவேண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்தவேண்டுமென்ற அந்த கடும் அழுத்தம் சிலவேளை டெல்லி பயணத்தோடு வரக்கூடிய வாய்ப்பிருக்கும் அதன்மூலமாகத் தான் இலங்கையை தான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு இருக்கு. அது அப்படியில்லையேல் 13 ஐ நடைமுறைப்படுத்துவதை விட நாங்கள் சொல்வதைக் கேட்கவேண்டும். அல்லது தங்களுக்கேற்ற தளமாக மாறவேண்டும் என்ற அழுத்தங்களையும் இந்தியா கொடுக்கலாம். அதற்கு சில வேளைகளிலும் இலங்கை இணங்கக்கூடிய வாய்ப்பு இருக்கும் 13 ஐ நடைமுறைப்படுத்துவதை விட வடக்கு கிழக்கில் இந்தியாவினுடைய விருப்பங்களுக்கேற்ற அபிவிருத்திகளை செய்வதற்கு இலங்கை இணங்குமாக இருந்தால் அரச வேலைகளை 13 ஐ நடைமுறைப்படுத்துவது என்பது பேச்சளவோடு நின்றுகொண்டு இந்தியாவினுடைய நோக்கங்களுக்கு ஏற்ப திருகோணமலை, காங்கேசன்துறை, பலாலி விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாணம் தீவு பகுதியை மையமாகக் கொண்ட இந்தியா அபிவிருத்தி எங்களுக்கு இந்தியாவினுடைய தேவைக்கும் பயன்படுத்தக்கூடிய இலங்கை விட்டுக்கொடுக்கக்கூடிய வாய்ப்புக்களும் அநேகமாக இந்தப் பயணத்தோடு வரக்கூடிய நிலைமை காணப்படுகின்றது.

**தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை அண்மையில் லண்டனுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தின்போதும் ஈழ தமிழர் பிரச்சினை தொடர்பான முக்கியமாக குறிப்பிட்டிருந்தார். அதாவது புலம்பெயர்ந்த ஈழ தமிழர் மத்தியிலும் தன்னுடைய உரையை நிகழ்த்திய போதும் இது தொடர்பாக அவர் முக்கியமாக கவனம் செலுத்தியிருந்தார். இது குறித்து உங்களுடைய பார்வை என்ன?**

13 ஆவது திருத்தச் சட்டம் தீர்வு என்று அவர் லண்டனிலே சொல்லியிருக்கின்றார். ஆனால் லண்டனிலே அவரை அழைத்து ஏற்பாடு செய்த அமைப்பு கூட சொல்லியிருக்கின்றது 13 தீர்வு அல்ல. அதை தமிழ் மக்கள் ஏற்கனவே நிராகரித்து விட்டார்கள் என்று . இருந்தாலும் 13 தான் தீர்வு என்று சொல்லிவிட்டு அண்ணாமலை சென்றிருக்கின்றார். அதற்குஅடுத்ததாக இன்னொரு கருத்தையும் அவர்கள் சொல்லமுடியவில்லை. ஆகவே ஒன்று தெளிவாகின்றது. 13 ஐவிட அதற்கு அப்பால் வேறு எந்த தீர்வும் இலங்கையிலேயே சாத்தியப்படாது. குறிப்பாக ஈழத் தமிழ் மக்களை பொறுத்தவரையிலேயே 13 ஐ தான் ஏற்கவேண்டும்.

ஒற்றையாட்சி அரசியல் யாப்பிற்கான 13 ஆவது திருத்தச் சட்டத்தைத்தான் தீர்வாக ஏற்கவேண்டும் என்பதை இந்தியா ஒரே நிலைப்பாடாக எடுத்துவிட்டது என்பது தெரிகின்றது.

ஏனென்றால் அண்ணாமலை இந்த மக்களுடைய கேள்விகளுக்கு பதில் வழங்கவில்லை. 13 தான் தீர்வு என்று அடியோடு கூறிச் சென்றுவிட்டார். ஆகவே பா.ஜ.காவாக இருக்கலாம் காங்கிரஸ் இருக்கலாம் எந்த கட்சி ஆட்சிக்கு வந்தாலும் 13க்கு அப்பால் எந்தத் தீர்வும் இல்லை என்பது தெரிகின்றது. அநேகமாக இலங்கையும் அதைத்தான் வலியுறுத்தி இருக்கின்றது. இப்போது எங்களுடைய பாதை எப்படி இருக்கின்றது என்றால் இந்த கடுமையான சீன செல்வாக்கைக் குறைப்பதற்கு சிலவேளைகளிலே இலங்கை இணங்கக்கூடும். அதாவது இந்தியா விரும்புகின்ற இந்தியா தன்னுடைய தளங்களுக்கேற்ப இராணுவ தளங்களுக்கேற்ப இலங்கையை மாற்றி அமைக்கக்கூடிய குறிப்பாக வடக்கு கிழக்கை முழுமையாக இந்தியா தன்னுடைய கட்டுப்பாட்டுக்கு எடுத்து செயற்படுத்தக்கூடிய அளவிற்கு இணங்கக்கூடிய வாய்ப்பு இருக்கலாம். ஏனென்றால் 13 ஐ நடைமுறைப்படுத்துவதை விட அதற்கு இணங்கிவிட்டால் அது ஒரு அளவிற்கு திருப்தியாக இருக்கலாம் என்று இலங்கை நம்புகின்றது. குறிப்பாக நீங்கள் ஒன்றை பார்க்கலாம். இலங்கையினுடைய சர்வதேச பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினுடைய செயற்பாட்டாளர் பேராசிரியர் றொகான் குணரட்ண மற்றும் தயான் ஜெயதிலக்க ஆகியவர்களின் கருத்துகளை பார்க்கின்றபொழுது அவற்றை நாங்கள் அறியக்கூடியதாக இருக்கும் தயான் ஜெயதிலக்க ஒன்றை தெறிவாக சொல்லியிருக்கின்றார் 13 ஐ நடைமுறைப்படுத்துவதை விட இந்தியாவிடம் இலங்கை தேவையான விடயங்களை ரணில் விக்கிரமசிங்க ஒப்புகொள்ள போகின்றார் என்று கூறியிருக்கின்றார். அதாவது 13 ஆவது நடைமுறைப்படுத்தினால் நல்லது என்ற கருத்தை அவர் முன்வைக்கின்றார். ஆனால் ரணில் விக்கிரம சிங்கவை பொறுத்தவரையில் அல்லது இலங்கை அரசாங்கம் பொறுத்தவரையில் 13 ஐ விட இந்தியாவிற்கேற்ற வகையில் இலங்கை விட்டுக்கொடுத்தால் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று ஆபத்தான சிந்தனைக்கு வருகின்றார்கள் என்ற எச்சரிக்கை ஜெனான் திலக ஏற்கனவே எழுதியிருக்கின்றார். சர்வதேச பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினுடைய செயற்பாட்டாளர் பேராசிரியர் றொகான் குணரட்ண அவர் தெளிவாக சொல்லுகின்றார் 13 தேவையில்லை என்று. அதேபோன்று டெல்லியிலே இருக்கின்ற தூதுவர் பில்ட மொறகொட அவரும் ஏற்கனவே சொல்லியிருக்கின்றார் 13 நடைமுறைப் படுத்தவேண்டிய அவசியம் இல்லை என்று. அதை மையமாகக் கொண்டுதான் தமிழகத்தில் கூட அவர் சில பணிகளை மேற்கொண்டு வருகின்றார். அப்படி பார்க்கின்றபொழுது இலங்கைக்குத் தேவையான விடயங்களுக்கு இலங்கை இணங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக் கின்றன மாத்திரம் இந்த அணுகுமுறைமூலம் கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்கின்றது.

• • •